1182

இதழ்: 2.

# எம்மிறைத் தூதர்கட் கதிபர்

(ஸல்)

ஹிஜ்ரி 1352—ம்௵
ரபீயுல்அவ்வல்௴ 12-உ வியாழக்கிழமை
(6—7—1933)

---

BY


## A. MEERAN,

**PRESIDENT, MAHAJANA SABHA,**

**ERUVADI.**


---

*சொல்வீராக! மெய்யானது வந்துவிட்டது.*
*பொய்யானது மறைந்துவிட்டது. நிச்சயமாய்*
*பொய்யானது மறைந்து போகக்கூடியதாயிருக்கிறது.*
—திரு. குர்ஆன் 17-81.

On the occasion of the 1405th birth-day celebration of the WORLD SAVIOUR MUHAMMAD.

(*Peace and blessings of Allah be upon him.*)

This book is presented by
AHAJANA SABHA, ERUVADI.
Tinnevelly Dt.
1933.

[ Free.

R7:31
N33
125344

திருவுருவா யுணருருவா யறிவினேடுத்

தெளிவிடத்துஞ் சிந்தியாத

வருவுருவா யுருவுருவா யகம்புறமுந்

தன்னியலா வடங்கா வின்பத்

தோருவுருவா யின்மையினு வுண்மையினைத்

தோற்றுவிக்கு மொளியா யாவு

மருவுருவாய் வளர்காவன் முதலவனைப்

பணிந்துள்ளி வாழ்த்துவாமே.

(சீரு).

ஹிலால் பிரஸ், வடக்கு ரதவீதி, திருநெல்வேலி.—7-'33.

# எம்மிறைத் தூதர்கட் கதிபர் (ஸல்)

இதனை

ஆக்கியோன்:

**A. மீரான்,**

மஹா ஜன சபையின் தலைவர்,

ஏர்வாடி.

---

(மன்பதைகளுக்கு) அதர்மங்களைத் தடுத்துத் தர்மங்களைப் பரப்பவும் (அவர்களை) நல்வழிக்கழைக்கவும் உங்களுக்கிடையே ஒரு வர்க்கத்தார் அவசியம் இருக்கக்கடவர். அவர்கள்தான் ஜெய சீலர்களாவார்கள்.

—குர்ஆன். 3: 103.

உலக ரக்ஷகர் முஹம்மது முஸ்தபா ரசூல் (ஸல்) (அவர்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக.) அவர்களின் 1405-வது ஜனன வைபவத்தினத்தன்று "ஏர்வாடி, மஹா ஜன சபையின"ரால் இலவசமாய் வினியோகிக்கப்பட்டது.

Copies 1500.] **1933.** [Free.

அருளாளனும் அன்புடையோனுமாகிய (அல்லாஹ்) தெய்வத்தின் திருநாமத்தால். (யாம் ஆரம்பிக்கின்றோம்).

# எம்மிறைத் தூதர்கட் கதிபர் (ஸல்)

( தௌராத் )

உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை
நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரி
லிருந்து எழும்பப்பண்ணி என் வார்த்
தைகளை அவர் வாயில் அருளுவேன்
நான் அவருக்கு கற்பிப்பதை யெல்லாம்
அவர்களுக்குச் சொல்லுவார். — உபாகமம் (18 : 18)

( இஞ்சீல் )

நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லு
கிறேன் ; நான் போகிறது உங்களுக்குப்
பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்
தால் தேற்றரவாளன் உங்களிடத்தில்
வரார். நான் போவேனேயாகில் அவரை
உங்களிடத்திற்கு அனுப்புவேன்.—

அவர் வந்து பாபத்தைக்குறித்தும், நீதி
யைக்குறித்தும், நியாயத் தீர்ப்பைக்குறித்
தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்
துவார்.—

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது
சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை
நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப்
பேசாமல் தாம் கேள்விப்பட்டவைகள்
யாவையுஞ் சொல்லி வரப்போகிற காரியங்
களை உங்களுக்கு அறிவிப்பார். —யோ. (16-7.8.13.)

## ( புர்கானுல் அலீம் )

அவர்கள்பாலுள்ள தௌராத்திலும், இஞ்சீலிலும்
அறிவிக்கப்பட்டிருக்கும் உம்மீயாகிய
திருத் தூதரென்னும் நபியைப் பின்பற்றுகிற
வர்கள். —குர்ஆன் ( 7: 157 )

உங்களுக்கு நம்முடைய அறிவிப்புக்களை ஓதிக்
காட்டுகிறவரும் உங்களைப் பரிசுத்தமாக்குகிற
வரும், உங்களுக்கு ஞானத்தையுங் கற்றுக்கொடுத்து
நீங்கள் அறியாதிருந்ததை உங்களுக்கு அறிவிக்கிறவரு
மான ஒரு தூதரை உங்களுக்குள்ளிருந்து உங்களுக்கு நாம் அனுப்
பியதே போல். —குர்ஆன் (2: 151).

அந்த வாக்குத் தத்தஞ் செய்யப்பட்ட
தீர்க்கதரிசி யென்பதில் கிஞ்சிற்றுஞ்
சந்தேகமில்லை. இக்காரணத்தினால் தான்
நாம் பிர்அவ்னுக்கு அனுப்பி வைத்த தீர்க்
கதரிசியே போன்ற ஒரு தீர்க்கதரிசியை
உங்களுக்குள்ளிருந்து நாம் நிச்சயமாக
எழுப்பியிருக்கிறோம். —குர்ஆன் (73:15).

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# அவதாரம்

நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம், நபி மூஸா அலைஹிஸ்ஸலாம், நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் இவர்களுக்கு முறையே அவர்கள் ஆண்டவனால் வாக்குத் தத்தஞ் செய்யப்பட்டு, தௌராத்திலும், இஞ்சீலிலும் வலியுறுத்தப்பட்டும் புர்கானால் அலீமில் பூர்த்தி செய்யப்பட்டுமுள்ளபடி எம்'மிறைத் தூதர்கட் கதிபர், இணையிலா இஸ்லாமிய மதஸ்தாபகர், மானுஷிக உலக உண்மை இரக்ஷகர், ரசூலே கரீம் ஷபீஉல் முதனிபீன் அஹ்மது முஜ்தபா முஹம்மது முஸ்தபா ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் (அவர்மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அரேபியா வென்னும் தீபகற்பத்தில்,புண்ணியம் பெற்றுள்ள மக்கமா நகரத்தில் பனீ இஸ்மாயீல் சந்ததியினின்றும் குறைஷியர்கள் கோத்திரம், ஹாஷிம் குலத்தில் அப்துல்லாவை பிதாவாகவும், ஆமினாவை அன்னையாகவுங்கொண்டு கிறிஸ்து சகாப்தம் 571—ம்ஹு ஏப்ரல்மீ 22—வக்குச் சரியாய் ரபீவுல் அவ்வல்மீ 12-ம் நாள் திங்கட்கிழமை இரவு விடியேறு உதிக்கர சற்று முன்னம் இம் மண்ணுலகில் திருவவதாரம் பெற்றார்கள். இந்த ஜனனவைபவ ஆண்டு, தெய்திகளில் சரித்திராசிரியர்களுக்கிடையே சொற்ப வித்தியாசங்கள் காணப்படினும் மெஜாரட்டியாரின் அபிப்பிராயமே இங்கு தரப்பட்டிருக்கிறது. பிதாவான அப்துல்லா வென்பவர் தன்னருமை மகவைக் கண்ணாற்காணும் பாக்கியங்கூட கொடுத்துவைக்கப்பெறாதவராய் இக்குழந்தை தன் அன்னையின் கர்ப்பக்கிரஹத்திலிருக்கும்போதே காலகதிக்கிரையானார்.

இவ்வாறுள்ள நிலைமையில், தந்தையை யிழந்த துர்பாக்கியத் திற்குள்ளான இந்தச் சிசுவுக்கு தாயார் அஹ்மது(புகழ்பவர்) என்றும் பிதாவை ஈன்ற பாட்டனாரான அப்துல் முத்தலிபு முஹம்மத் (புக ழப்பட்டவர்) என்றும் நாமகரணஞ் சூட்டினார்கள்,

பெறுதற்கரிய இப்பாலகர் பிறந்து அன்னையராம் ஆமினாபீபி யால் மூன்று நாளும், அபூலஹபுடைய (நபி (ஸல்) அவர்களின் சிறிய தந்தையார்) அடிமைப் பெண் துவைபாவால் ஒரு மாதமும் பாலூட்டப்பெற்று, அதன் பின் அந் நாட்டு உயர்குலத்தாச்சாரப் படி ஹலீமா வென்னும் ப.த.உ. வம்சத்தைச் சேர்ந்த ஒரு மாது செவிலித்தாயாகத் திட்டஞ் செய்யப்பட்டார். இதன் பயனாக தன் அன்னையரான ஆமீனாவின் நேரான பராமரிப்பிலிருந்தும் விடுவிக் கப்பட்டு குழந்தைப் பருவத்தையுடைய அஹமது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் (அவர்மீது சாந்தியும் சமாதானமும் உண் டாவதாக) தன் செவிலித் தாயாரோடு தாயுபுக்குத் தெற்கேயுள்ள மலைப்பிராந்தியத்தினடுவே தன் இளமைப் பருவத்தைக் கழித்து வரும்படி நேர்ந்துளது.

## உலகமும் முக்கியமாய் அரேபியாவும் அதன் நிலைமையும்

இஃது இங்ஙனமிருக்க இந்த அவதார மூர்த்தி ஜனித்துள்ள காலத்து உலகமும் முக்கியமாய் அரேபியாவும் எவ்வாறான நிலைமையி லிருந்து வந்ததென்பதைச் சற்று ஆராய்ந்து பார்ப்பது மிகவும் பொருத்தமாகும். உலக மனைத்திலும் பண்டைய காலத்து மதங்க ளெல்லாம் இருந்தவிடம் தெரியாது புதைபட்டுப்போயிருந்தன. உலகமன்பதைகளனைவரும் பெரும்பாலும் விக்ரஹ ஆராதனையிலும், லிங்கப் பூஜையிலும், யோனிப் பூஜையிலுமே ஈடுபட்டிருந்தனர்: அதிலும், அரேபியாவின் நிலைமையோவென்றால் இங்கு செப்பத் தரமன்று. உலகமெங்குமுள்ள சர்வ தீமைகளும் ஒன்றாய்த்திரண்டு இங்கு பிரதிபலித்துவந்தன. கல்வி என்பதே நிறை சூன்யமாயும், நியாயமென்பதே தலைகீழப்பாடமாயும், கொலை பாதகத் தொழில்

களை பிறவிக்கடமையாகவும், களவு செய்து வருவது காலக்ஷேபமாயும், அன்னை யென்றும், சகோதரி யென்றும், உற்றார் உறவினரென்றும் பாராது பெண்டாடிவருவதே மதக் கடமையாயுமிருந்து வந்தன. இந் நாட்டார் சிசுஹத்திகள் செய்வதில் சிறிதும் தயங்குவதில்லை. பெண் சிசுக்கள் உயிருடன் புதைக்கப்பட்டும் வந்தனர். தவிரவும், இவர்கள் மதமும் விக்ரஹ ஆராதனையாகவே இருந்து வநதது. அரேபியர்கள் வீடுகளிலும், வீதிகளிலும், சந்து பொந்துகளிலும் இருந்துவந்த விக்ரஹங்களுக்குக் கணக்கேயில்லை. மேலும், கஃபா வென்னும் பரிசுத்த தேவாலயத்தினுள் முன்னூற்றுக்கதிகமான விக்ரஹங்கள் குழுமிக்கிடந்தன. இவ்விக்ரஹங்களின் திருப்திக்காக நரபலியுங் கொடுத்துவந்தனர். அன்றியும், ஆண் பாலரும், பெண் பாலரும் ஆயிரக்கணக்காய் ஒன்று கூடி சிறிதும் லஜ்ஜையில்லாது ஆடையின்றி இவ்விகிரஹங்களைச் சுற்றி வலமும் வந்தனர். சுருங்கக் கூறுமிடத்து, அஞ்ஞான அனுச்சார அதர்மங்களே அரசு புரிந்துவந்தன வென்று சொல்லிவிடலாம். இவ்வாறுள்ள ஜன சமூகத்தினரிடையே தான் நபிகள் பெருமானாரவர்கள் அவதாரமெடுத்துள்ளார்களென்பதையும் சிந்தையிலிருத்திக்கொள்ளல்வேண்டும்.

## குழந்தைப் பருவம்

இது இவ்வாறிருக்க, தங்கள் நாட்டில் நேர்ந்துள்ள பஞ்சத்தால் பீடிக்கப்பட்டு வறுமையின் காரணமாக காலக்ஷேபத்தைக் கருதி மக்கா நகர் வந்துள்ள ஹலிமா வென்னும் மாதும், அவர் கணவரும் தங்களிடத்தே பாலூட்டிப் போஷிப்பதற்காக ஒப்புவிக்கப்பட்டுள்ள குழவிப் பருவத்தையுடைய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை (இவர் மீது சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக) மிகவும் பக்ஷத்தோடு எடுத்தணைத்துத் தன் சொந்த வாசஸ்தலமாகிய ஹுனைன் என்னும் கிராமம் கொண்டுவந்து சேர்ந்து, இந்தச்சிசு தன்னிடத்தே வந்து சேர்ந்த அதிர்ஷ்ட வசத்தின்காரணமாக தங்களுக்கு நேர்நதுள்ள வறுமையும் நீங்கப் பெற்று எதேஷ்டமான முறைமையில் தங்கள் வாழ்க்கையையும் நடாத்திக்கொண்டு இக்குழந்தையையும் மிக்க அன்பு பாராட்டிப் பாலூட்டிச் சீராட்டிப்

பரிபாலித்து வந்தது மல்லாமல், இக்குழந்தையின் அற்புதச் செயல்களையும், அரிய குணங்களையுங்கண்டு அடிக்கடி ஆச்சரியமும், பேரானந்தமுமடைந்து வந்தனர்.

இவ்வாறு பாலப்பருவத்தையுடைய எம்பெருமானாரவர்கள் தங்கள் நான்காவதாண்டு வரை செவிலித தாயாரான ஹலீமா வென்னும் மாதால் நாளொரு மேனியும், பொழுதொருவண்ணமுமாய் வளர்க்கப்பட்டு வந்து, அப்பால் இந்த போஷகத் தாயாராலேயே மக்கா நகர் கொண்டுவரப்பட்டு தங்கள் அன்னையாம் ஆமிஞபீபி யென்னும் பெண்கள் நாயகியாரிடம் சேர்ப்பிக்கப்பட்டார்கள்.

ஆயினுமென்ன, தனதருமைத்தாயின் இணையற்ற பராமரிப்பிலும் நீண்ட நாள் இருந்துவரும் பாக்கியமும் படைத்திருக்கவில்லை. ஏனெனின் குழந்தைப் பருவத்தையுடைய எம்மிறைத் தூதரவர்கட்கு ஆருவதாண்டுப் பருவத்தில் தாயோடு மதிஞ சென்று திரும்பிவருமிடையே அபவா வென்னுமிடத்திவ் அன்னையராம், ஆமிஞ பீபி நோய்வாய்ப்பட்டு அதன் காரணமாய் தேக வியோகமானர் என்னே! ஆண்டவனின் அமைப்பிருந்தவாறு. (தனது இறுதி நபியாய் வரக்கூடிய இந்த அவதார சிகாமணி, தந்தை, தாயிழந்து அனதை முறையில் பயின்றுவரவேண்டு மென்று எல்லாம் வல்ல இறைவன் திருவுளங் கொண்டிருந்தான்போலும்). ஆகவே, தந்தையையும் தாயையுமிழந்த இந்த அனதைச் சிறுவரான எம்பெருமானரவர்களை ஆமிஞ பீபியுடன் துணைசென்றிருந்த பணிவிடைப் பெண்ணுகிய உம்முஐமன் என்னும் மாதால் பத்திரமாய் மக்கா நகர் கொண்டுவரப்பட்டு, பாட்டனூரான பெரியார் அப்துல் முத்தலிபிடம் சேர்ப்பிக்கப்பட்டார். அந்த விருத்தரான பாட்டனரும் தன்னருமைப் பௌத்திரரை மிகவும் பிரியமாய அன்பு பாராட்டி பரிபாலித்துவந்தாரெனினும் இப்பெரியாருடைய ஆதரவிலும் அதிகநாள் இருந்துவரவில்லை. ஏனெனின், சிறுவரான நபிகள்பெருமானரவர்களுக்கு எட்டாவது பிராயத்தில் பாட்டனூரான இவரும் 82-வது வயதில் நோய்வாய்ப்பட்டு மரணப் படுக்கையி லிருக்கும்பொழுது தனது புதல்வரான அபுத்தாலிபிடம் தனது செல்வப் பௌத்திரரை வலியுறுத்திச்

சொல்லி ஒப்படைத்துவிட்டு அதாவது கி. பி. 579-ல் பரலோகப் பிராப்தி யடைந்துவிட்டார்.

உலக மத போத்தகராம் எம் இரசூல் அதிபரின் பாலப்பருவம் தெய்வத் திருவுளப்படி இவ்வாறுள்ள நிலைமையில் முடிந்ததுபற்றிச் சிந்திக்கும் எவர் மனமும் வருந்தாமலிருப்பதற்கில்லை யென்றாலும், பின்னால் நாயகமவர்களது வாழ்க்கையில் வேறெவரிடத்துங் காணப் பெறாத பல அரிய உயர் லக்ஷணங்கள் அமைந்திருந்ததற்கு இந்த அனாதைமுறைப் பயிற்சியும் ஒரு காரணமா யிருந்ததென்று இணை யிலா இப் பெரியாரவர்களே கூறியிருப்பதாய்ச் சரித்திரங்கள் கூறு வதிலிருந்து ஒரு ஆறுதலைத் தருவதாயுமிருக்கிறது. இவ்விதமாயின் திருவருட் சோதனையா லுண்டாகும் ஒவ்வொரு வினையும் நன்மையைப்பற்றி நிற்குமேயன்றி தீமையைப்பற்றியன வல்ல வென்பதும் இங்கு ருஜூப்பிக்கப்படுகிறது.

இவ்வாறு தன்னிடத்து பிதாவால் ஒப்புவிக்கப்பட்ட தன் தம்பி யின் புதல்வரை அபுத் தாலிபு மார்போடணைத்து எந்தி தன் இல்லங் கொண்டுவந்துசேர்த்து தன் மகவினு மிக்க உருத்தும், அன்பும் பாராட்டிப் பரிபாலித்துவந்தார். தவிரவும் இப் பெரியார் எம் பெருமானாரவர்களுக்குத் தமது மரண பரியந்தம் போதிய உதவியும், ஆதரவுமளித்துவந்தாரென்று சொன்னால் சிறிதும் மிகையாது. அது சமயம் எம்மிறைத் தூதரவர்கட்குக் கல்வி பயில்விக்கப்படுவதற்குப் போதிய பருவம் அமைந்திருந்தும், அது விஷயத்தைப் பற்றிக் கவனிக்கப்படாது மானுஷிக உலகத்தை மேய்ப்பதற்காகத் தெய்வத் திருவருளால் அவதாரமாய் வந்துள்ள பாலப்பருவமுடைய அஹ்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் (இவர்மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அந் நாட்டு வழக்கப்படி தன் பெரிய தந்தையாரால் தங்கள் குடும்பத்துக்குச் சொந்தமான ஒட்ட கங்களையும், ஆடுகளையும் மேய்க்கும்படி நியமிக்கப்பட்டார்.

இங்ஙனம் தம்மிடத்தே ஒப்புவிக்கப்பட்ட ஒட்டகங்களையும், ஆடுகளையும் நன்கு போஷிக்கச் செய்வதிலும், பாதுகாப்பதிலுமே கவனத்தைச் செலுத்திவந்தார்கள். தம்மோடு ஆடு மேய்க்கும்

இதரச் சிறுர்கள் தங்களோடு விளையாடுவதற்கு அழைத்தாலும் அவர்களோடு கலந்துகொள்ளாமல் தமது ஒய்வு நேரங்களில் அங்குள்ள கற்பாறைகளின்மீதேறிக்கொண்டு தனித்திருந்து இயற்கை வனப்புகளைப் பார்த்து அதே சிந்தனையிலாழ்ந்து பேரானந்தப் பரவசமடைவார். தவிரவும், நம் இரசூல் அதிபரவர்கள் தம் குழந்தைப் பருவமுதலே எவ்விதமான விளையாட்டுகளுக்கும், வீண் புரளிகளுக்கும் ஈடுபடாது நேர்மையிலும் சீர்மையிலும் உற்ருர் உறவினர் அயலார் யாவராலும் நன்கு மதிக்கப்பட்டே வந்தார்கள். இவ்வாறே சிறிது காலங் கடந்து தமது 12-ம் பிருயத்தில் தமது பெரிய தகப்பனுரும், போஷகருமான அபுத்தாலிப் போடு வியாபார விஷயமாய் ஷாம் தேசம் சென்று திரும்பிவந்து அதுமுதல் வியாபாரத் தொழிலிலேயே ஈடுபட்டுத் தேர்ச்சியுடன் சிறந்து விளங்கியதுமல்லாமல் பொறுமை. நேர்மை, சீர்மை, ஈவு, இரக்கம், புண்ணியம், உயர்குணம் நல்லொழுக்கம், பெருந்தகமை, பேரன்பு, சத்தியந் தவருமை, நம்பிக்கை, தபம் இவைகளில் தமது இளமைப் பருவத்திலிருந்தே தலை சிறந்து விளங்கி வந்தமையால் அந்நாட்டு மக்களால் மிகவும் போற்றப்பட்டு வந்தவர்களாய் "அல்அமீன்" (நம்பிக்கைக்குரியவர்) என்னும் புகழுரைக்கும் உரியவரானுர்கள்.

## யௌவனம்.

தவிரவும், அதுசமயம் அரேபியாவையும், அங்குத் தாண்டவமாடிவரும் அளவிலாக் கொடுமைகளையும் நினைந்து, நினைந்து மனமுருகி கண்ணின் நீரை ஒடையாய்ப் பெருக்கி வருவார்கள். இவ்வாறு யாவராலும் போற்றப்பட்டு வியந்துவருங்காலையில் மக்காவில் ஐஸ்வரியத்திலும், வர்த்தகத்திலும் முதன்மை வாய்ந்துள்ள குவைலீத் என்பாரின் புதல்வி, கதிஜாவென்னும் பெருமாட்டியார் தான் நடாத்திவரும் அபரிமிதமான அயல் நாட்டு ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்துறைக்கு நம்பிக்கையும் தேர்ச்சியும் வாய்ந்துள்ள தலைவரொருவர் அவசியமெனக் கண்டு அபுத்தாலிபு மூலமாய் பிரயாசையெடுத்து தனது வர்த்தகத்தில் கிடைக்கும் ஊதியத்தில் போதிய பங்கீடு செய்து தருவதாய் வாக்குறுதி செய்து கொடுத்து "அல்

அமீன்'' நம்பிக்கைக்குரியவரென்று யாவராலும் போற்றப்பட்டு வரும். நமது அவதாரசிகாமணி கண்மணி அவர்களையே தமது வர்த்தகத்துறையின் தலைமை ஸ்தானத்திற்குத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்.

இவ்வாறு, கதிஜாப்பிராட்டியாரின் வர்த்தகத் தொழிலில் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்ட இம்மாபெரும் பெரியார் யாவரும் வியக்கத்தக்கவாறு சீருஞ் சிறப்பும் பெற நடாத்தி ஏராளமான லாபமுங் காட்டி எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்டுவரும் அந்நாளில் மங்கையர்க்கரசியாம் பீபி கதிஜா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் உள்ளங் கசிந்து பேருவகைப்பூத்து இம் மகத்துவந் தங்கிய மேதாவியை தமது நாயகராய் அடையும் பாக்கியம் பெறவேண்டுமென்ற ஆர்வ மேலிட்டவராய்த் தன் உள்ளக் கிடக்கையைத் தன்னுடைய அடிமையாகிய மைஸ்ருவின் மூலமாய் அபுத்தாலிபு அவர்களுக்குத் தெரியப்படுத்தவே அவரும் ஒருவாறு சரி கண்டவராய் தன் தம்பியின் மைந்தரையும் சம்மதிக்கச் செய்து இரு சாருங்கூடி நிக்ஷயார்த்தமும் செய்து கொண்டனர்.

## திருமணம்

இம்முடிவிற்கேற்ப, ஒரு சுபதினத்தில் யாவர் முன்னிலையிலும் விவாகோற்சவமும் நடைபெற்றதின் பயனாய், குவைலீத் என்பவரின் திருக்குமாரியாம் கதிஜா வென்னும் மங்கையர்க்கரசியார் உலக சிரேஷ்டராய் அவதார மெடுத்து வந்துள்ள அப்துல்லாவின் அருந்தவப் புதல்வரான அஹ்மது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை (இவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) பர்த்தாவாயடையும் பெரும் பேற்றையும் பெற்றுக் கொண்டதல்லாமல் உலகமுள்ளளவுமுள்ள அழியாப் புகழுரைக்கும் பாத்திரமானார்கள்.

இவ்வாறு திருமணஞ் செய்துகொண்ட தம்பதிகளிருவரில் மணமகன் 25-வது பிராயத்தையும், மணமகள் இருமுறை விதவை யென்னும் கைம்பெண்ணுக்காளாய் அது சமயம் 40-வது

வயதையுடையவராயிருந்தும், சதிபதிகளிருவரும் யாவரும் வியந்து பாராட்டத் தக்கவாறு ஒருவருக்கொருவர் அன்பு அபிமானம் காட்டி வாழ்ந்து வந்தார்கள். முக்கியமாய் கதிஜா நாயகியவர்கள் தம் பெறுதற்கரிய கணவரிடத்து அளவிலா பக்தி விசுவாசங் கொண்டு ஒழுகிவந்ததுமல்லாமல் தன்னிடத்தே குவிந்துள்ள பெருஞ் செல்வத்தையும் தமதாருயிர்த்துணைவரதிஷ்டத்திற்கே விட்டுவிட்டார்கள். எம்பெருமானாரவர்களும் சற்றேறக்குறைய 25 வருஷம் அதாவது தங்கள் 50-வது வயது வரை இவ்வுத்தம பத்தினியுடனேயே வாழ்க்கையை நடாத்திவந்தார்கள்.

இப்பெருமாட்டியாரின் நேர்மை, உயர்குணம், சீர்மை, பெருந்தகமை இவைகளைப்பற்றி எம் ரசூல் அதிபரவர்கள் தமது இறுதி காலம் வரை அடிக்கடிப் புகழ்ந்து பேசாமலிருந்ததில்லை. கதிஜா பிராட்டியாரின் மரணத்துக்குப் பின் பீபி ஆயிஷா ரலியல்லாஹுஅன்ஹாயவர்களை விவாகஞ் செய்துகொண்டதின் பின் ஒரு சமயம் நபிகள் திலகமவர்கள் தமது முதல் மனையாளாகிய உத்தம பத்தினியின் அருங்குண விசேஷத்தைப்பற்றி மெச்சிப் பேசியபோது பீபி ஆயிஷா ரலியல்லாஹுஅன்ஹா அவர்கள் தன் நாயகரை நோக்கி "கதிஜா பிராட்டியார் வயதில் தளர்ந்தவர்களாயிருந்தார்கள். ஆனால், அவர்களை விட யௌவனத்திலும் அழகிலும் சிறந்துள்ள நங்கையரை ஆண்டவன் தங்களுக்குத் தந்துள்ளதில்லையா" என்று திடீரென வினவினார்கள் அதைச் செவியேற்ற ரசூல் நாயகமவர்கள் "இல்லை; இல்லை; நான் வறுமையாளனாயிருந்த போது அவ்வுத்தம பத்தினி என்னை மணந்து தனவந்தராக்கினார். நபியென்று பொய் சொல்லி வருவதாய் யாவரும் என்னைத் தூற்றி வருங்காலத்து அவர் என் மீது முழு நம்பிக்கையும் வைத்து உறுதியுடன் என்னைக் கடைப்பிடித்து வந்தார். அரப்தேச வாசிகளனைவரும் எனக்குப் பகைவராய்த் திரண்டபொழுது கதிஜாப் பெருமாட்டியார் என் பக்கமிருந்து எனக்கு வேண்டிய உதவிபுரிந்து வந்தா"ரென்றும் சிறிதும் தயங்காது விடைபகர்ந்தார்கள்.

இவ்வாறு மகிமை வாய்ந்துள்ள கதிஜா நாயகியோடு நபிகள்

பெருமானாரவர்கள் தமது வாழ்க்கையை நடாத்தி வருங்காலையில் ஆடம்பரமற்ற எளிய தன்மையில் குடும்ப நிர்வாகத்தை நடத்திக் கொண்டு தமதருமைப் பிராட்டியாரின் அளவற்ற செல்வத்தின் பெரும் பகுதியை அவரின் அனுமதி பெற்று அனாதைகளை ரக்ஷிப்பதிலும், ஏழைகளைக் காப்பாற்றிவருவதிலுமே பெரிதும் வாரி இறைத்து வந்தார்கள். தவிரவும், இக்காலங்களில் பெரும்பாலும் எமது உலக சிரேஷ்டர் அவர்கள் ஜன சஞ்சாரமற்ற இடங்களில் தனித்திருந்து அறியாமையாலுண்டான அந்தகாரஇருளில் மூழ்கி, வீழ்ந்து தாழ்ந்துபோய்க் கிடக்கும் உலக மன்பதைகளின் நிலைமையைப்பற்றியும், அனாதைக் குழந்தைகளின் ஆதரவற்ற நிலைமையைப் பற்றியும், அடிமைகளின் பரிதாபத் தன்மமையைப்பற்றியும் பெரிதும் நினைத்து வருந்தி மெய்யிறையை இறைஞ்சி தபம் செய்து வருவதையே தமது முக்கியக் கடமையாய்க்கொண்டிருந்தார்கள். இவ்விதம் தபம் செய்து வரும் பல இடங்களில் ஹிரா வென்னும் மலைக் குகையுமொன்றாகும். சில சமயங்களில் இல்லத்திலிருந்து வேண்டிய ஆகாரத்தைக் கையிற்கொண்டு இம்மலைக் குகையிற் பல நாள் தங்கியிருந்து இரவு பகலாய் நிஷ்டையில் மூழ்கிவிடுவதுமுண்டு.

## நபித்துவம்.

இவ்வாறுள்ள புனித வாழ்க்கையிலேயே இவ்வுத்தம மானிட உலக ரட்சகர் அவர்களுக்கு 40-வது பிராயமுமடைபெறலாயிற்று. இவ்வாறே ஒரு சமயம் அந்த ஹிரா வென்னும் மலைக் குகையிற் ஆழ்ந்து தியானத்திலிருக்கும்போது, அதாவது கி. பி. 611—ம் ஹூ பெப்ரவரி 22-ம் நாள் நபிகள் பெருமானாரவர்களுக்கு ஆகாயத்தினின்றும் ஓர் அசைவு தோன்றப்பட்டு வானத்தினின்றும் ஓர் ஜோதி மயமானசிம்ஹாஸனம் கீழே யிறங்கி தம்மையே நோக்கி வருவதே போல் காணப்பட்டார்கள். அவ்வாறே, அது அவர்களருகில் வரவே அதினின்றும் ஓர் ஜோதிமயமான சொரூபி (ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம்) கீழே இறங்கி வந்து எம்பெருமானாரவர்களை நோக்கி "ஓதுவீராக" என்று கூறினர். அதைக் கேட்டவுடன் இந்த அவதாரமூர்த்தி "யான் ஓதியவ னல்லன்" என்று விடைபகர்ந்தார்கள்.

அப்போது அந்த வானவர்க் கதிபர் அவர்களை இறுகத் தழுவி திரும்பவும் "ஓதுவீராக" என்று சொன்னார். அதுபோழ்தும் தெரியாதென்றே கூறினார்கள். இவ்வாறு மூன்று முறை இறுகத் தழுவி அந்த வானவர்க்கதிபர் "ஓதுவீராக" வென்று கூறினார். இது சமயமும் தெரியாதென்றே விடை பகர்ந்தார்கள். உடனே அந்த ஜோதிமயமான சொரூபி (வானவர்க்கதிபரான ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம்) இதனடியிற்காணும் ஐந்து ஆயாத்துக்களையும் ஓதினார்.

1. ஓதுவீராக; படைத்த உமது றப்பின் திருநாமத்தைக் கொண்டு;

2. மனிதனை உதிரக் கட்டியினின்றும் படைத்தான்.

3. ஓதுவீராக! மேலும் உமது றப் மிகவும் கண்ணியமுள்ளவனாயிருக்கிறான்.

4. எழுதுகோலைக் கொண்டு கற்பித்தவன்.

5. மனிதனுக்கு அவன் அறியாதிருந்ததை அறிவித்தவன்.

—குர்ஆன் 96 : 1—5:

என்று கூறினார். எம்மிறைத் தூதரவர்கள் இவ்வைந்து ஆயாத்துக்களையும் அப்படியே ஓதினார்கள். இது முடிந்ததும் அந்த ஜோதிமயமான சொரூபி (ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம்) "தாங்கள் ஆண்டவனின் திருத்தூதராயிருக்கிறீர்கள்" என்று நன்மாராயங்கூறி விட்டு அவ்விடத்தை விட்டும் மறைந்தார். (இதையே நபிப்பட்டம் என்று வழங்கப்பட்டு வருகிறது) இவ்வாறு நிகழ்ந்துள்ள சம்பவங்களைக் கண்டு திக் பிரமைக்கொண்டவர்களாய்ய் பயந்து நடுக்கமுற்று நபிகள்பிரானவர்கள் தங்கள் இல்லம் வந்து சேர்ந்ததும் படுக்கையிற் படுத்துக்கொண்டு தம்மை போர்வையாற் போர்த்திவைக்கும்படி தங்களருமை மனையாட்டியாரிடம் கூறினார்கள். அவ்வாறே போர்த்தி வைக்கப்பட்டு சிறிது நேரஞ் சென்று மயக்கம் தெளிந்ததும் ஹிரா வென்னும் அம்மலைக்குகையிற் நடந்தேறியுள்ள விருத்தாந்தங்களை முதன் முதல் தமதருமை நாயகியரான கதிஜா பெருமாட்டியாரிடம் பகர்ந்தார்கள். அம் மங்கையர்க்கரசியார் அகைத

கேட்டதும் தமது பிராண நாயகருக்குத் தைரிய மொழிகள் கூறித் 'தங்களை ஆண்டவன் ஒரு போதும் கைவிடமாட்டான். அஞ்ச வேண்டுவதில்லை. மிகவும் சந்தோஷத்தோடிருங்கள். தாங்கள் கிருபைக்குக் களஞ்சியமாயுள்ளவர்கள், சத்தியமே அவதாரமாய் வந்துள்ளவர்கள். அனாதைகளையும், ஏழைகளையும் ஆதரிப்பதில் இணையற்றவர்கள். பந்து மித்திரர்களை அன்புடன் உபசரிக்கும் உத்தமராயிருந்து வருகிறீர்கள். நற்கருமங்களுக்கு எச்சமயத்தும் உற்ற துணைவராயிருந்து வருகிறீர்கள். ஆகவே, "எனதாவிக்குரியவன் எவனோ அவன் மீது பிரமாணமாக தாங்கள் ஓர் உண்மையான தீர்க்கதரிசி யென்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லவேயில்லை" என்று கூறி அந்நாட்டுப் பண்டைக்காலத்து மதங்களாகிய தௌராத்திலும், இஞ்சீலிலும் இணையற்று ஆராய்ச்சி செய்து மிக்கத் தேர்ந்தவரும், கிறிஸ்துவ மதத்தைத் தழுவியவருமான தமது பெரிய தந்தையின் புதல்வர் வர்ஹா வென்னும் வயோதிகரிடம் தமது இணையிலா நாயகரவர்களை கதிஜாப் பிராட்டியார் அழைத்துச் சென்று அவரிடம் ஹிராவென்னும் குகையிற் நிகழ்ந்துள்ள சம்பவங்களனைத்தையும் விபரமாகக்கூறினர்.

இந்த வஹீவந்த விவரத்தைக்கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த அந்த வர்ஹர் வென்னும் ஆராய்ச்சியாளர் ஆச்சரியமேலிட்டவராய் திரு நபியவர்களை நோக்கி "பரிசுத்தம்;—பரிசுத்தம்;—நிச்சயமாய் உம்மிடம் வந்த இவர்தான் மூஸாவுக்கும், ஈசாவுக்கும் (வஹீ) கொண்டு வந்த நாமூஸுல்அக்பர் (வானவர்கதிபர்) என்பவராவர். ஆகவே, "எனதுயிர் எவன் கைவயமிருக்கிறதோ அவன்மீது சத்திமாக ஆண்டவன் இவ்வுலகத்துக்கு உம்மை ஓர் தீர்க்கதரிசியாகவே அனுப்பி வைத்துள்ளான். நீவிரே அந்த வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட தீர்க்கதரிசியுமாவீர். உறுதியாக உம்மிடம் வந்தவர் அந்த நாமூஸுல்அகபரே (வானவர்க்கதிபர்) யாவர்" என்று கூறி முடித்ததும் உடனே உத்தமியான கதிஜாப் பெருமாட்டியாரே நபிகள் திலகம் அவர்கள்மீது நந் நம்பிக்கைகொண்டு முதன் முதலில் சுத்த சத்திய இஸ்லாத்தைத் தழுவினார்கள்.

இது விருத்தாந்தங் கேள்வியுற்றதும், அதி பால்யரான அலீ

(ரலி) அவர்களும், அபூபக்கர் ஸித்திகா (ரலி) அவர்களும், ஜைத் என்பவரும் மற்றுஞ் சிலரும் தீனுல் இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டார்கள். இந்த நிலைமையில், எம்பெருமானுரவர்கள் பரிசுத்த இஸ்லாத்தைப்பற்றி பஹிரங்கப் பிரச்சாரம் புரியத் துணியவில்லை. சற்றேறக்குறைய மூன்ருண்டுகள் வரை அந்தரங்கமாகவே தங்கள் சன்மார்க்கத்தைப் போதித்து வந்தார்கள். இக்காலத்தில் சிறிது பெயர்வழிகளே இஸ்லாத்தைத் தழுவினர்.

## பிரச்சாரம்

இம்மாதிரி பஹிரங்கமின்றியே பிரச்சாரம் நடந்துவருங்காலத்து இரண்டாம் முறையாக அந்த ஜோதிமயமான சொரூபி (ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம்) யால் தேவ ஆணை (வஹீ) கொண்டுவரப்பட்பட்டது. அது அடியிற்வருமாறு:—

> ஏ. போர்த்துக்கொண்டிருப்பவரே? எழுந்திரும்; அச்சமூட்டி எச்சரிக்கை
> செய்வீராக; உம்முடைய ரப்பைப் பெருமைப் படுத்துவீராக; உம்முடைய ஆடையைபரிசுத்தமாக வைத்துக்கொள்வீராக;
> அசுசியை வெறுத்துவிடுவீராக.—குர்ஆன் 74: 1—5:

இவ்வாறு தேவ கட்டளைக் கிடைக்கப்பெற்றதும், உடனே அச்சத்தைவிட்டும் நீங்கப் பெற்றுத் தைரியமாய்ப் பஹிரங்கப் பிரச்சாரம் புரியத் துணிந்து முதன் முதல் கஃபா (பரிசுத்த தேவாலயம்)வினுள் பிரவேசித்து அங்குக் குழுமியிருநத குறைஷிக் கூட்டத்தினரிடையே ஏக தெய்வக் கொள்கையைப்பற்றியும், இஸ்லாத்தின் தத்துவங்களான சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம் இவைகளைப்பற்றியும் சவிஸ்தாரமாய்க் கூறி விக்ரஹ ஆராதனை, கொலை, களவு, பழிவாங்குந்தன்மை, வியபிசாரம், மதுபானம், சிசுஹத்தி முதலான சகல பாபச் செயல்களையும் மனதாலுங்கூட நினைத்துப் பாராது அவைகளை முற்றிலும் களைந் தெறிந்தவர்களாய் சத்திய இஸ்லாத்தைக் கடைப்பிடித்து அதன் பயனுய் நற்கதியடையுமாறும் மிகவும் உருக்கமாய்ப் போதித்து வருஞ்சமயத்து அதைக் கேட்ப

தற்குக்கூட மனம் பொருதவர்களாய் அக்கூட்டத்தினர் கோபாவே சங்கொண்டு, எம்மெய் யிறைத் தூதரவர்களை கஃபாவை (பரிசுத்த தேவாலயம்) இழிவுபடுத்திவிட்டதாக தோஷங்கூறி தாக்க ஆரம்பித்தார்கள். இத்தாக்குதலினின்றும் நபிகள் பெருமானாரவர்களைத் தப்புவிக்க முயன்ற ஹாரிஸ் பின் அபீஹாலா என்னும் உத்தமர் அவ்வெறியாளர்களின் வாளுக்கிரையாகி அவ்விடத்திலேயே தமதாவியையிழந்து விண்ணுலகேறினர். இம்மகா புருஷரே இஸ்லாத்திற்காகத் தனதாவியை அர்ப்பணஞ் செய்த முதல் புருஷராவர்.

இதினின்றும், இஸ்லாத்தைப்பற்றியப் பிரஸ்தாபம் எங்கும் பரவலாயிற்று. நபிகள் பிரான் அவர்களும், நடந்தேறியுள்ள சம்பவத்தின் காரணமாய்ச் சிறிதும் தளர்ச்சியுருது, தெய்வத்தின் ஆணையை சிரமேற்கொண்டவராய் இடைவிடாது நாள் தவருமல் வீதிகளிலும், கடைத் தெருவிலும், சந்து பொந்துகளிலுமுள்ள வீடுகளிலும் புகுந்து அங்கு காணும் ஜனங்களிடையே ஏக தெய்வக் கொள்கையைப்பற்றியும். இஸ்லாமியத் தத்துவங்களைப்பற்றியும், உயரிய நோக்கங்களைப் பற்றியும் போதித்துவந்தார்கள். இதன் மூலமாய், ஜனங்கள் சிறுகச் சிறுக இஸ்லாத்தைத் தழுவியே வந்தனர். இதைக் கண்டு குறைஷியர்கள் மனஞ் சகியாதவர்களாய் இப்பிரச்சாரத்தை விட்டுவிடுமாறு எம்பெருமானுரவர்களை வேண்டிக்கொண்டனர் முற்றிலும் அறியாமையாலுண்டான இவ்வேண்டுகோள் நிராகரிக்கப்படவே, அக் குறைஷியர்களால் தேவதூதரவர்கள் எச்சரிக்கப்பட்டார்கள். இது எச்சரிக்கையும் லஜ்ஜியம் செய்யப்படாது போகவே புதிய முஸ்லிம்களை சிறிது துன்புறுத்தவும் ஆரம்பித்தனர். இதிலும் பலன் பெருதது கண்டு குறைஷியர்கள் மனச்சோர்வடைந்து திக்பிரமைக்கொண்டவர்களாய் தங்கள் விக்ரஹ வணக்கத்திற்கும், அஞ்ஞான அனுசாரக் கொள்கைகளுக்கும், தங்கள் மக்காவின் தலைமைப் பதவிக்கும் இறுதிகாலங் கிட்டிவிட்டதெனக் கண்டு எவ்வகையாயினும் இச் சன்மார்க்க நற்போதனையை வேரறக் கில்லி எறிந்துவிடுவதே பரம சிலாக்கிய மென்ற முடிவுக்கு வந்து தங்களினின்றும் சிலரைப் பொறுக்கி யெடுத்து எம்மிறைத்தூதரவர்களிடம் தூதாக அனுப்பி " எங்கள்பாலுள்ள தனங்களையும், அழகிற்

சிறந்த பெண்களையும் தருவதாய்ச் சொன்னதோடு, மக்காவின் தலைமைப் பதவியையுங்கூடத் தங்கள் பாதார விந்தத்துக்கே அர்ப்பணஞ் செய்து விடுகின்றோம். ஆனால், எங்கள் விக்ரஹ ஆராதனையையும், எங்கள் பழக்க வழக்கங்களையும் கேவலமாய் கூறிவருவதை விட்டும் ஒதுங்கிவிடவேண்டுமென்றும்" வெகு நயமாய் வேண்டிக் கொண்டனர்.

இக்கூற்றைச் செவிமடுத்துக் கேட்கவுங்கூட மனமற்றவர்களாய்த் திரு நபியவர்கள் அக்குறைஷித் தலைவர்களை நோக்கித் தங்களுக்குத் தெய்வத்தாலருளப்பட்ட திருவசனங்களிலிருந்து சில நியாயப் பிரமாணங்களை யெடுத்துக் கேட்போர் மனங்கசிந்துருகுமாறு அத்தனை நயமாய்ப் போதித்தார்கள். இதைக் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த தலைவர்கள் சோர்வுற்று ஆண்டவனிடத்து மிகவும் பயந்தவர்களாய்த் தங்கள் நிலைதவறி திரும்பிப் போய் அந்த குறைஷிக் கூட்டத்தினரிடையே சென்று அத்தலைவர்களிலொருவரான உத்பாவென்பவன் பின்வருமாறு கூறத்துணிந்தான். "ஓ குறைஷிகளே! ஆண்டவன்மீது சத்தியமாய்ச் சொல்லுகிறேன். முஹம்மதுவிடமிருக்கும் வாக்கியங்கள் கவியாகவுமில்லை; மாயசூன்ய மந்திரங்களாகவுமில்லை; ஆனால், அது ஒரு தெய்வ வரப்பிரசாதமாயிருந்து வருவதாகவே காணப்படுகின்றது. அவரால் போதிக்கப்படும் சன்மார்க்கத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளத் தயங்காதீர்கள். அவரின் ஆதிக்கியம் அரேபியாவில் நிலைபெறுமானால் அதன் காரணமாக நீங்கள் கண்ணியத்தைப் பெற்றுக்கொண்டவர்களாவீர்கள். அவர் இது காரியத்தில் அபஜெயம் பெறுவாரானால் நீங்களே அச்சன்மார்க்க நற்போதனையை அழித்துவிட்ட தோஷத்திற்காளாவீர்கள்."

இவ்வாறு உத்பா கூறியதும், அக்கூட்டத்தினர் பெரிதும் ஆச்சரியமுற்றுத் திகைப்படைந்து கோபாவேசங்கொண்டவர்களாய் "ஒன்று அவர் இப்பிராச்சாரத்தை விட்டுவிடவேண்டும்; இல்லையேல் அவரைக் கொன்றேவிடவேண்டு" மென்ற ஏகோபித்த முடிவுக்கு வந்து அபுத்தாலிபிடம் சென்று அவரிடம் முறையிட்டார்கள். அதிலும் பிரயோஜனம் தரவில்லை. இவ்வாறு பல தடவை முயற்சித்

தும் பலன் கிடைக்காதுபோகவே, முடிவாய்க் குறைஷியர்கள் யாவரும் ஒன்று கூடி அபுத்தாலிபிடம் சென்று அவரை நோக்கி 'தங்கள் வயதின் முதிர்ச்சிக்கும், கண்ணியத்திற்கும், பெருந்தகைமைக்கும் யோக்கியதைக்கும், உயர் பதவிக்கும், நாங்கள் சிரம் சாய்த்தவர்களாயிருக்கின்றோம். ஆனால், எங்களைப் புண்படுத்திவருவதினின்றும் தங்கள் தம்பியின் புதல்வரை ஒதுங்கி நிற்கும் வண்ணம் தங்கள் செல்வாக்கை உபயோகிக்கும்படி பன் முறைத் தங்களை நாங்கள் வேண்டியும், அது வகையில் தாங்கள் சிறிதும் சிரத்தை யெடுத்துக்கொண்டதாய் நாங்கள் அறியக்கூடவில்லை. எங்கள் தெய்வங்களையும் எங்கள் ஆசாரங்களையும் தூஷித்துவருவதில் அவர் சற்றும் பின்வாங்கவேயில்லை. இனி நாங்கள் எக்காரணத்தையிட்டும் சகித்துக்கொள்ள முடியாத நிலைமைக்கு ஆளாய்விட்டோம். ஆகவே நீர் ஒதுங்கியிருப்பீராயின் நாங்கள் எங்கள் மனம்போனவாறு அவரைத் துன்புறுத்தி ஒழித்து விடல் வேண்டும். அவருடைய மதக் கொள்கையில் உங்களுக்கே நம்பிக்கை யில்லாதிருக்கும்பொழுது நீங்கள் ஏன் அவரை விட்டு எங்கள் கக்ஷியில் சேர்ந்துகொள்ளல் கூடாது. எங்களோடு சேர்ந்துகொள்வது கூடாத காரியமாயின் நீங்கள் பஹிரங்மாய் அவருடன் சேர்ந்துகொண்டு எங்களோடு யுத்தஞ்செய்ய தயாராயிருத்தல் வேண்டும். இதுவே எங்கள் இறுதியான முடிவாகும்'' என மிகவும் கோபத்தோடு கூறினார்கள்.

இக்கடுமொழிகளைக் கேட்டதும், அபுத்தாலிபு அக்குறைஷியர்களுக்கு நயமொழிகள் கூறி சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டார் குறைஷியர்கள் இவ்விதமான சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ளதற்கும் காரணமில்லாமலில்லை. ஏனெனில், அபுத்தாலி பென்னும் பெரியார் மக்கமா நகரத்திலுள்ள முக்கியத் தலைவர்களிலொருவராவர் ஆகவே, அவரை எளிதில் பகைத்துக்கொள்ளக்கூடிய அத்தனைத் தைரியம் குறைஷியர்களுக்கு வரவில்லை, அபுத்தாலிபென்பார் ஈமான் கொண்டு இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டாரென்றும் இல்லை யென்றும் சரித்திராசிரியர்களுக்கிடையே முரண்பாடுகள் காணப்படுகின்றது. அது எங்ஙனமிருப்பினும்; அவர் தாம்மரணிக்கும் வரை தம்முடைய பூரண ஆதரவையும் போதிய உதவியையும்

மாசற்ற முறைமையில் தன் தம்பியின் மைந்தருக்கு அளித்து வந்தாரென்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆகவே, இது மிடுக்கான சந்தர்ப்பத்தை அபுத்தாலிபு உணர்ந்து நபிகள் பெருமானாரவர்களை தருவித்து "என் அருமைச் சகோதரரின் புதல்வரே! நமது சகோதரக் குறைஷிகளனைவரும் என்னிடம் வந்து நிர்த்தாட்சண்யமாய்ப் பயமுறுத்திவிட்டுச் சென்றிருக்கிறார்கள்: அது சாமான்யமன்று அதை அலட்சியஞ் செய்யாது கவனத்திற்கொண்டு பார்ப்பீராக என் மீது இரக்கங்காட்டுவதுமட்டுமின்றி, உம் தம் மீதும் இரக்கங் காட்டுவீராக; என் நிலைமைக்கு மீறிய பாரத்தை என் மீது சுமத்தாதிருப்பீராக குறைஷிகள் யாவரும் ஒன்று திரண்டு வரும்போது தனி மனிதனாகிய என்னால் யாது செய்து விடல் கூடுமென்பதையும் கவனித்துப்பார்க்கவுங் கடைமைப்பட்டிருக்கிறீர். அத்துடன் இது சந்தர்ப்பமோ மிகவும் நெருக்கடியானதாயிருக்கிறது என மிகவும் மனமுருகிக் கூறுவாராயினர்.

இதைச் செவியேற்றதும் ! நபிகள்பிரானவர்கள் "ஆ! என தருமைப் பெரிய தந்தையரே! எல்லாம் வல்ல இறைவனாகிய அல்லாஹ்வின் மீது பிரமாணமாக நான் என் சிரமீது கொண்டிருக்கும் இக்காரியத்தைக் கைவிடுமாறு செய்விக்கும் பொருட்டாக எனதொரு கரத்தில் சூரியனையும் மற்றொரு கரத்தில் சந்திரனையும் கொண்டுவந்து வைத்தபோதிலும் சன்மார்க்க சத்தியப் பிரச்சாரத்தை ஒருபோதும் கைவிட மாட்டேன் என்று கூறி உடனே தெய்வத்தை நோக்கி "ஆண்டவனே! உனதாணையை நிறைவேற்றும் இது கடமையில் எனக்கு வெற்றியைத் தந்தருள நீயே கடமைப்பட்டவன்; இல்லையேல் இது கடமையிலேயே என்னை மறணிக்கச் செய்வாயாக" என்று வேண்டியதும் தாம் இவ்வாறுரைத்த மறுமொழியால் தம்மை அன்பு மிக்க பக்ஷங்காட்டி ஆதரித்துப் பரிபாலித்து வந்த தமதருமைப் பெரிய தந்தையார் அளவுக்கு மீறிய மனப் புண்ணால் அவஸ்தைபட நேருமே வென்ற வருத்தத்தால் தங்கள் இரு நேத்திரங்களிலும் நீர்த்ததும்ப அவ்விடத்தை விட்டும் அகன்றார்கள். இவ்வாறு வெளியேறிய தனது தம்பியின் அருந்தவப் புதல்வரை அபுத்தாலிபு திரும்பவும் அழைத்து மன

முருகியவராய் "எனதருமை மைந்தரே! நீர் உமது சித்தம் போல் நடந்துகொள்வீராக: ஆனால், நான் மட்டும் தெய்வ சாக்ஷியாக உம்மை ஒருபோதும் கைவிடப் போவதில்லை" யென்று உறுதி மொழி கூறி அனுப்பி வைத்தார்.

## குறைஷியர்களின் கொடுமைகள்.

இத்தகைய நிலைமையோடு வெளியே சென்ற நபிகள்பெருமானா ரவர்கள் சிறிதும் மனங் கலங்காதவர்களாய் இயற்கையே போன்று தமது பிரச்சாரத்தைத் துணிந்து நடாத்தி வருவதைக் கண்ட குறைஷியர்கள் ஆத்திரமும், சாத்திரமும் மேலிட்டவர்களாய் மட்டி லடங்காக் கோபாவேசத்தோடு ஐயோ! ஏழை முஸ்லிம்களை எவ்வகை யாலும் கஷ்டத்திற்குள்ளாக்க வேண்டுமென்ற முடிவிற்கு வந்து தங்கள் துர்க்கிருத்தியங்களை காரியத்தில் நடாத்திக் காட்டத் துணிந்துவிட்டார்கள். இப்பரிதாபக் காக்ஷியை இங்கெடுத்துக் காட்டுவது முடியாத காரியமேயாயினும் சுருங்கக் கூறுமிடத்து கொடும் பாதகர்களான அந்தக் குறைஷிக் காபிர்களால் நிரபராதி களான ஏழை முஸ்லிம்கள் அடைந்து வந்த துன்பங்களுக்கும் இன்னல்களுக்கும் ஓர் எல்லையில்லை; தூஷிக்கப்பட்டார்கள்; காறிய எச்சிலால் உமிழப்பட்டார்கள்; அடிக்கப்பட்டார்கள்; தடிகளால் தாக் கப்பட்டார்கள்; கல்லாலெறியப்பட்டார்கள், சூரிய வெப்பத்தில் தேரி மணலில் கட்டி உருட்டப்படடார்கள்; தோலுரிக்கப்பட்டார்கள்; மாறுகால் மாறுகை வாங்கப்பட்டார்கள்; சித்திரவதை செய்யப்பட் டார்கள்; சிரசு துண்டிக்கப்பட்டார்கள்; மனைவி மக்கள் இழக்கப் பட்டார்கள்; செல்வங்களனைத்தும் கொள்ளையிடப்பட்டார்கள்; பட் டினியால் வாடி வதைக்கப்பட்டார்கள்; சமூக பஹிஸ்காரமுஞ் செய்யப்பட்டார்கள். ஆயினுமென்ன?

மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார் கண் துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற் கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினர்.

என்றதற்கேற்ப இத்தனை கர்ண்கடூரமான கொடிய செய்கைகளுக்கிடையேயும், எம்பெருமானாரவர்களாயினுஞ்சரி சத்திய சன்மார்க்க இஸ்லாத்தைப் பின்பற்றியவர்களாயினுஞ்சரி, அந்த வஞ்நெஞ்சர்களான குறைஷியர்கள் மீது ஒரு துரும்பையும் எடுத்தெறியாது தாங்கள் கொண்ட கொள்கையில் சிறிதும் மனத்தளர்ச்சியடையாதவர்களாய்ச் சகித்து வருவதையே தங்கள் கடமையாகக் கொண்டு பூண்டொழுகி வந்தார்கள். இத்தனை சகிப்புத் தன்மைக்கும், மனோ உறுதிக்கும் நபிகள்பெருமானாரவர்களின் உயரிய லக்ஷணங்களும், அரிய குணங்களும், விடா முயற்சியும், சத்திய சன்மார்க்க நற்போதனையுமே சிறந்த ஔஷதமாயிருந்து வந்ததென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

இவ்வாறான கொடுமைகள் அந்நாட்டில் கரைபுரண்டோடியுங்கூட நபிகள் திலகமவர்கள் இடைவிடாது தமது பிரச்சாரத்தை நடாத்திவந்தார்களென்பதற்கும், ஒரு முஸ்லிமாவது சத்திய இஸ்லாத்தை விட்டு அப்பால் சென்றுவிடவில்லையென்பதற்கும் சரித்திரங்கள் சான்றாயிருந்து வருகின்றன. எம் மெய்யிறைத் தூதரவர்கள் யாவராலும் நடுங்கத் தக்க இம் மாபாதகக் கொடுமைகளையும் துன்பங்களையும் தங்கள் வாழ்க்கையில் பின்னால் வரப்போகும் வெற்றிக்கறிகுறியான ஞாபகச் சின்னமாகவேக் கருதி வந்தார்கள். இவ்வாறு நாள் தவறாது நடந்துவரும் கொடுமைகளுக்கும் இன்னல்களுக்குமிடையே நபிகள் நாயகமவர்கள் முன்னிலும் அதிக ஊக்கத்துடன் விக்ரஹ ஆராதனையையும், அதனையாதரிப்போருடைய செய்கைகளையும் மிகவும் கண்டித்துப் பேசி ஏக தெய்வத்தையே வணங்கவேண்டும்; நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்தொழுக வேண்டுமென்றும் போதித்து வந்தார்கள். இதைக் கேட்டதும் குறைஷியர்கள் முன்னிலும் பன்மடங்கதிகமாக ஆத்திரத்தோடும் கோபாக்கினியோடும் கதியற்ற ஏழை முஸ்லிம்களை ஹிம்சிக்கத் தலைப்பட்டார்கள்.

---

# முஸ்லிம்கள் அபிஸ்ஸீனியா செல்லல்.

எக்கொடுமைகளையும் துன்பங்களையும் சகித்துக்கொள்ளத் தாங்கள் தயாராகவிருந்தபோதிலும் எளிய முஸ்லிம்கள் அடைந்து வரும் கஷ்ட நிஷ்டூரங்களையும் அல்லல்களையும் பார்த்துச் சகியாது துக்கமேலிட்டு மனமுருகியவர்களாய் தமது பக்தர்களை நோக்கி இந்த மூர்க்கர்களான குறைஷியர்களிடையே மதச்சுதந்திரத்திற்கும், ஜன சுதந்திரத்திற்கும் நிம்மதியான வாழ்க்கைக்கும் சிறிதும் இடமில்லாததாயிருப்பதால் தற்கால ஏற்பாடாய்ச் சிறிது காலத்துக்கு (ஆண்டவன் அநுக்கிரஹம் கிடைக்கும் வரை) செங்கடலுக்கு மேற்கேயுள்ள கிறிஸ்துவ ராஜ்யமாகிய அபீஸ்ஸீனியாவென்னும் நாட்டில் குடியேறும்படி ஆலோசனை கூறி அநுமதியளித்தார்கள். ஆனால் சன்மார்க்க பக்தர்களான முஸ்லிம்கள் நபிகள் நாயகமவர்களை விட்டும்பிரிந்துபோக மனமற்றவர்களாய்க் காணப்பட்டாலும் எம்மிறைத் தூதரவர்களின் வார்த்தைகளைத் தயங்காது ஏற்று நடந்துகொள்வதே சாலவும் சிறந்ததெனக் கண்டு அந்நாட்டில் சற்றேறக்குறைய ( இரண்டு மூன்று முறையாக ) 100 முஸ்லிம்கள் குடியேறினர். (இது சந்தர்ப்பம் நுபுவ்வத்-நபிப்பட்டம் வந்து ஐந்தாவது வருடமாகும்.)

இது விஷய மறிந்த பாதகர்களான குறைஷியர்கள் இத்துடனுவது விட்டுவிட மனமற்றவர்களாய் எக்காரணத்தையிட்டும் அவர்களை மக்கா நகருக்குத் திரும்பவும் கொண்டு வந்துவிட வேண்டுமென்ற கொடூரச் சித்தத்தோடு அந்த அபிஸ்ஸீனியா தேசத்து மன்னனுன ஹஸ்கிமாநஜ்ஜாஷி என்பவரிடம் தங்களினின்றும் சிலரைத் தூதாக அனுப்பியுள்ளார்கள். இவ்வாறு தூது சென்றவர்கள் அபிஸ்ஸீனியாப் போய்ச் சேர்ந்ததும், அங்குள்ள அரசாங்க நிர்வாகத் தலைவர்களையும் கிறிஸ்துமத பாதிரிகளையும் வேண்டிய லஞ்சகம் கொடுத்து தங்கள் வசப்படுத்திக்கொண்டு அந்நாட்டரசனிடம் எங்கள் நாட்டு மக்களை எங்களிடம் விட்டு விடவேண்டுமென்று விண்ணப்பம் சமர்பித்துக்கொண்டனர். அந்த நீதிவழுவா மன்னன் இருசாராரின் வாதங்களையும் நன்கு அலசி சர்ச்சை

செய்து முடிவாய் நியாயம் முஸ்லிம்கள் பால் இருப்பது கண்டு காபிர்களான குறைஷியர்களின் வேண்டுகோளை நிராகரித்தது மன்றி ஆண்டவன் மீது சத்தியமாக இந்தக் குர்ஆனும், இஞ்சீலும், உண்மையாக ஒரே கர்த்தாவினிடமிருந்தும் வெளிவந்துள்ள இரு நக்ஷத்திரங்களேயாகுமென மிகவும் தொனிக்கக் கூவினன்.

## ஹாஸிம் குலப் பஹிஷ்காரம்

இம்முடிவைக் கேட்டதும் அத்தூதர்கள் மிக்க ஏமாற்றமடைந்தவர்களாய் சுய நாடு வந்து சேர்ந்ததும் காபிர்களான குறைஷியர்கள் விஷயமறிந்து திருநபியவர்களின் பரம்பரையினரான ஹாஷிம் குலத்தவர்களைச் சமூக பஹிஷ்காரஞ் செய்தனர் இம்முடிவின் பயனாக அபுத்தாலிபும் அவ்வரைச் சார்ந்துள்ள ஹாஷிம் கிளையினரும் மக்காவை யடுத்துள்ள ஒரு மலைக்குன்றின் மீது குடியேறும் நிர்ப்பந்தத்திற்குள்ளாயினர். தவிரவும் இவர்கள் ஆகாரப் பதார்த்தங்கள் சேகரித்துக்கொள்ள முடியாவண்ணம் இம் மலைக் குன்றைச் சுற்றி நாற்புறங்களிலும் காவலும் வைத்தனர். ஆகவே, இப் பரிதாபக் காட்சிக்குள்பட்டுள்ள ஹாஷிம் கிளையினர்கள் பல நாள் தங்கள் மனைவி மக்களோடு ஆகாரமின்றி பசியால் வருந்தவேண்டுவ தாயிற்று. சகித்துக்கொள்ள முடியா பசியின் காரணமாக இலைகளையும், தழைகளையும் ஆகாரமாய்ப் புசித்தும் வந்தனர். இந்த நிலைமையில் கஃபாவின் (பரிசுத்த தேவாலயம்) வருடாந்த உற்சவம் நடைபெறுங் காலங்களில் இந்தக் காவல் நிறுத்தி வைக்கப்படும். அக் காலங்களில் வெளி யிடங்களிலிருந்தும் இந்த உற்சவத்திற்காக ஏராளமான ஜனங்கள் அங்கு வந்துபோவார்கள். அவர்களிடையே நபிகள் பிரானவர்கள் தமது ஏக தெய்வக் கொள்கையைப் பற்றியும் இஸ்லாத்தின் தத்துவங்களைப் பற்றியும் பிரச்சாரம் புரிந்துவருவார்கள். மற்றவர்கள் தங்களுக்கு வேண்டிய ஆகாராதிகளைச் சேகரித்துக்கொண்டு வரும்பொருட்டு வெளியே செல்வார்கள். இவ்வாறான ஹிம்சைகளுக்கிடையே ஹாஷிம் கிளையினர்கள் மூன்றாண்டுகள்வரை கஷ்டத்திற்குட்பட்டுவந்தனர். முடிவாய் மக்காவி

லுள்ள சில இளைஞர்களின் முயற்சியால் இக் கொடிய நிர்ப்பந்தம் நீங்கப்பட்டு பாதுகாப்புக்குட்பட்டிருந்தவர்கள் விடுதலை செய்யப் பட்டார்கள்.

இவ் விடுதலைக் கேற்ப சுயேச்சை பெற்றுள்ள எம் ஆண்டவனின் திருத் தூதரவர்கள் தமது கடமையிற் சற்றுந் தளராது பிரச்சாரத்தை நடாத்தியே வந்தார்கள். ஆனால் மூர்க்கர்களான குறைஷியர்களும் தாங்கள் செய்துவரும் இன்னல்களையும் விளைவித்தே வந்தனர். இவ்வாறு நடைபெற்றுவரும்போது நுபுவ்வத் (நபிப்பட்டம்) வந்த பத்தாம் வருடத்தில் ரசூல் நாயகம் அவர்களின் பெரிய தந்தையரும், அருமைப் பாதுகாவலருமான அபுத்தாலிபும், உயிர்த் துணைவியரான கதிஜாப் பெருமாட்டியாரும் பரகதி யடைந்தார்கள். உண்மையில் இவர்களுக்காகப் பயந்திருந்த அக் குறைஷிக் காபிர்கள் இவர்களிருவரும் இறைவனடி சேர்ந்ததும் தங்கள் பயத்தை அறவேயொழித்துவிட்டு ஏழை முஸ்லிம்களைத் தங்கள் மனம் போனவாறெல்லாம் துன்புறுத்துவாராயினர்.

ஆகவே, எம்பெருமானாரவர்கள் மக்காவை விட்டும் அதையடுத்து 50 மைல் தூரத்திலுள்ள தாயிபு என்னும் நகருக்குச் சென்று பிரச்சாரம் புரிந்துவரலாமென்ற நோக்கமுடையவர்களாய் அங்கு சென்றார்கள். ஆனால், அங்குள்ள மிலேச்சர்களால் கல்லாலெறியப்பட்டும் தேக மெங்கும் உதிரஞ் சிந்த திரும்பவும் மக்கா நகருக்கே வந்து சேர்ந்தார்கள். இங்கு வந்தும் பலவித கஷ்ட நிஷ்டூரங்களுக்கிடையே மூன்றாண்டுகளை மூன்று யுகங்களாகக் கழித்து வந்ததோடு, யாத்திரை காரணமாக மக்காவுக்கு விஜயஞ் செய்யும் வெளியூர் ஜனங்களிடையே பிரச்சாரம் புரிந்துவந்தார்கள். இவ்வாறு யாத்திரையாக வருவோர்களில் மதினாவாசிகளுமிருந்தனர். இவர்களிற் சிலர் சத்திய இஸ்லாத்தைத் தழுவியதுமன்றி, தங்கள் நகராகிய மதினாவுக்குச் சென்று ஆங்கு இஸ்லாமியப் பிரச்சாரம் செய்து, திரும்பவும் ஆண்களும், பெண்களுமாக சுமார் 75 முஸ்லிம்களுடன் மக்காவுக்கு வந்து நபிகள் நாயகமவர்களிடம் தாங்கள் இக் கொடுந் துன்பங்களுக்கிடையே இங்கிருக்கவேண்டாம். நாங்கள் தங்களுக்காக எங்கள்

உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தஞ் செய்ய சித்தமாயிருக்கிறோமென்று பிரமாணிக்கமாய்க் கூறி, எங்களோடு மதிணாவுக்குவந்துவிடுங்களென்று மிகவும் பக்தி விசுவாசத்தோடு வேண்டிக்கொண்டார்கள். இந்த வேண்டுகோளை யநுசரித்து நபிகள் பெருமானாரவர்களும் அபிஸ்ஸீனியாவுக்குச் சென்றவர்கள் போக எஞ்சியுள்ள இஸ்லாமியப் பக்தர்களைச் சிறுகச்சிறுக மதிணாவுக்கு அனுப்பிவிட்டுத் தாங்கள் மட்டும் சில அத்தியந்த நண்பர்களுடன் மக்காவிலேயே தங்கி வந்தார்கள்.

## (ஹிஜ்ரத்) மதிணா செல்லல்.

இது சமயம் நுபுவ்வத் (நபிப்பட்டம்) வந்து 13-வது ஆண்டாகும். இச் சந்தர்ப்பத்தில் எம்மிறைத் தூதரவர்களுக்கும் மதிணாவுக்குச் சென்றுவிடுமாறு தெய்வ ஆக்கினையும் வந்தது. ஆகவே, தாங்களும் மதிணாவுக்குப் பிரயாணிக்கச் சித்தமாய்விட்டார்கள். இதற்கிடையே முஸ்லிம்கள் மதிணா சென்றுவிட்ட விஷயமறிந்த குறைஷிச் சதியாளர்கள் ஆத்திரமிக்கக் கோபத்தோடு இனி முஹம்மதுவும் போய்விடுவார்; ஆனால் அவரையும் விட்டுவிடுதல் கூடாது. ஆகவே, அவரைப் போகவிடாது கொன்றுவிடவேண்டுமென்ற தீர்மானங் கொண்டு ஒரு நாளிரவு நமது திரு நபியவர்களின் கிரஹத்தைச் சுற்றிலும் பலமான காவலும் வைத்துவிட்டனர். (இந்த அறிவிலிகள் நபிகள் திலகமவர்களை உயிர்வாங்கிவிடவேண்டுமென்று முடிவு செய்துகொண்டது இதுமுதல் தடவையன்று. இம் மாதிரி இதற்குமுன்னும் பலமுறை முடிவு செய்ததுமுண்டு. ஆனால், தேவ வரப்பிரசாதம் பெற்று தீர்க்கதரிசிகளுக் கெல்லாம் அதிபராய் அவதாரமெடுத்து வந்துள்ள இறுதி நபி அவர்களின் முன் தங்கள் சபதம் பலிதம் பெறமுடியாதென்பதை உணராமலிருந்ததே இத்தனை அறியாமைக்கும் காரணமாகும்). இது விஷயமறிந்த தீர்க்கதரிசிகள் திலகமவர்கள் இந்த நிர்ப்பந்தமான காவலுக்கிடையே திருவருள் துணை கொண்டு அன்றிரவே காவலர்கள் யாவரும் அதிசயிக்கத் தக்கவாறு தமது உற்றத் துணைவரான அபூபக்கர் சித்திகா (ரலி) அவர்களுடன்

தங்கள் கிரஹத்தைவிட்டும் வெளியே சென்று தௌர் என்னும் மலைக்குகையிற் போய் தங்கினார்கள். இக் குகையினுள் தங்கி யிருக்கும்போது அங்கும் அந்த விரோதிகள் வராமலில்லை. ஆயினு மென்ன, இணையிலா ஆண்டவன் அவனது உண்மைத் திருத் தூதரை நிகரற்ற காவல் புரிந்துவரும்போது அந்த விஷமிகளால் யாது செய்துவிடுதல் சாலும் ஆகவே, அந்தப் பாதகர்கள் தங்க ளுக்கு நேத்திரங்களிருந்தும் விழிகண் குருடர்களாய் கருத்தி ழந்து வந்த வழியே திரும்பிச் சென்றனர். அப்பால் யாதொரு விக்னமுமின்றி சுக ஜீவியாய் கி. பி. 622 ம் வரு செப்டம்பர் மீ 20-உ புதன் கிழமை மதினு நகர் போய்ச் சேர்ந்தார்கள். (இந் நகர் மக்காவிலிருந்து சுமாறேறக்குறைய 250 மைல்களுக்கப்பா லிருக் கிறது). இத் தினமே இஸ்லாத்தின் இணையிலா வெற்றிக்கும், ஓங்கிய வளர்ச்சிக்கும் காரணஹேதுவாயிருந்த சுப தினமாகும். இதிலிருந்துதான் ஹிஜிரி சகாப்தமும் கணிக்கப்பட்டுவருகிறது

## யுத்தங்கள்.

இவ்வாறு மதினு வந்துசேர்ந்த உலக சிரேஷ்டரவர்கள் யாதொரு நிர்ப்பந்தமும், கவலையுமின்றி அங்குள்ளவர்களுக்கு நல்லுபதேசம் செய்துவந்ததுமன்றி அரேபியாவின் இதர பாகங்களுக்கும் மதினு வைச் சுற்றியுள்ள இதரவிடங்களுக்கும் இஸ்லாமியப் பிரச்சாரகர்களை யனுப்பி சத்திய இஸ்லாத்தைப் பிரபல்யப்படுத்திவந்தார்கள். இஸ் லாம் இவ்வாறு விருத்தியடைந்துவருவதைக் கண்ணுற்ற குறைஷி யர்கள் மனம் பொறாதவர்களாய் ஹிஜிரி இரண்டாம் வருடத்தில் 1000-க்கு மேற்பட்டுள்ள போர் வீரர்களோடு மக்காவிலிருந்து சுமார் 230 மைல் தூரத்திலும், மதினுவுக்கு 20 மைல் சமீபத்திலுமுள்ள (பத்ரு) வென்னும் மைதானத்தில் யுத்தத்திற்காக அணி வகுத் தனர். இதுவிவரமறிந்துள்ள எம்மிறைத் தூதரவர்கள் தற்காப்பி னிமித்தம் சிறியாரும் பெரியாருமாக 313 சன்மார்க்கப் பக்தர்களைத் கொண்டு இவ்விடத்தி லெதிர்த்தார்கள். இதுவே முதல் முதல் நடைபெற்றுள்ள யுத்தமாகும். இந்த யுத்தத்தில் முஸ்லிம்கள் மிக வும் குறைவாயிருந்தபோதிலும், எதிரிகள் முறியடிக்கப்பட்டுச் சிதறி

யோட்டப்பட்டனர். அத்துடன் பல கைதிகளும் பிடிக்கப்பட்டனர். தவிரவும், குறைஷியர்களின் முக்கியத் தலைவர்களும் மாழ்விக்கப்பட்டனர். இந்த யுத்தத்தில் தான் அதிகப் பகைமையும், குரோத புத்தியும் காட்டிவந்துள்ள அபூஜஹலும், நபிகள் பெருமானாரவர்களின் சிறிய தந்தையரான அபூலஹபும் மடிந்தனர்

ஆனால், எதிரிகள் இத்துடனும் நின்றுவிடவில்லை அடுத்த வருடம் மிகவும் உக்ரத்துடன் அபாஸுப்யானைத் தலைவனாகக் கொண்டு 3000-க்கு மேற்பட்டுள்ள சேனைகளோடு மதீனாவுக்கு மிக மிகச் சமீபமாயுள்ள (உஹத்) என்னுமிடத்தில் யுத்தகோஷஞ் செய்தனர். நபிகள் நாயகமவர்கள் 700 முஸ்லிம்களோடு தற்காப்புச்செய்தார்கள். ஆனால், இந்த யுத்தத்திலும் எதிரிகளுக்கு பெரும் வாரியான சேதம் நேர்ந்தபோதிலும் முஸ்லிம்களுக்குத் திருப்திகரமான வெற்றி கிடைக்கவில்லை யென்றே சொல்லவேண்டும்.

இந்த நிலைமையில், சுயநாடு சென்ற எதிரிகளான குறைஷியர்கள் தங்களால் இதுகாறும் செய்துவந்த ஒவ்வொரு முயற்சியும்பலிதம் பெறாதுபோனது கண்டு ஆத்திரமும், சாத்திரமும், ரோஷமுங் கொண்டவர்களாய் ஹிஜ்ரி 5-வதாண்டில் 25000 சைன்யங்களோடு மதீனாவின் வாயிற்படியில் முற்றுகையிட்டனர். எம்மிறைத்தூதரவர்களும் அது சமயம் 3000 முஸ்லிம்களைக்கொண்டு மதீனாவைச் சுற்றிலும் அகழ் ஒன்று தோண்டிக்கொண்டு தற்காப்புச் செய்து வந்தார்கள். குறைஷியர்கள் சுமார் ஒரு மாத காலம் வரை இம் முற்றுகையை வளர்த்திக்கொண்டு வந்தார்களாயினும், திருவுளக் கேடால் நேர்ந்துள்ள பெரும் புயலாலும், கடும் மழையாலும், பனியின் கொடுமையாலும் எதிரிகளும், அவர்களைச் சார்ந்துள்ள ஏறு வாகனங்களும் இதரச் சாதனங்களும் பலமான சேதங்களுக்குட்படவே எஞ்சிப் பிழைத்தவர்கள் யுத்தத் தளவாடங்களையும் இருந்தவிடத்தே விட்டுவிட்டு வந்த வழியே யோட்டம் பிடித்தனர். ஆகவே, இத்துடன் குறைஷியர்களின் அட்டூழியங்களும், கொடூரச்சித்தமும் ஒருவாறு முடிவுக்கு வந்துவிட்டனவென்று சொல்லிவிடலாம். ஆகவே, சத்திய இஸ்லாம் எதிர்ப்பாரின்றி எங்கும் தழைத்தோங்குவதாயிற்று. ஹிஜ்ரி 6-வது ஆண்டு உலக சிரேஷ்டரவர்கள் 1400

ஏக தெய்வப் பக்தர்களுடன் ஹஜ்ஜின் காரணமாக மக்கா நகர் சென்றிருந்தபோது, குறைஷியர்களோடு ஒரு உடன்பாடும் செய்து கொண்டார்கள். அதன் சாராம்சம் அடியிற் வருமாறு:—

1. அடுத்து வரும் வருஷம் முஸ்லிம்கள் கஃபாவைத் தரிசித்துக்கொள்ளல் வேண்டும்.

2. இது முதல் பத்து வருடங்கள் வரை பரஸ்பரம் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொள்ளுவதில்லை யென்றும்; முடிவு செய்துகொண்டார்கள்.

## மன்னர்களுக்கு ஸ்ரீமுகம் விடுத்தல்

இந்த உடன்பாட்டை அனுசரித்து நபிகள் பெருமானாரவர்கள் திரும்பி மதீனாவுக்கு வந்து சேர்ந்ததும் அரேபியாவின் இதர பாகங்களிலுள்ள மன்னர்களுக்கும், அயல் தேசங்களான ரோமாபுரி, பெர்ஷியா, எகிப்து, அபிஸ்ஸீனியா முதலான பற்பல தேசாதிபதிகளுக்கும் சத்திய இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளுமாறு ஸ்ரீமுகம் அனுப்பியுள்ளார்கள். இவ்வாறு ஸ்ரீமுகம் விடுத்துள்ள மன்னர்களில், பஹ்ரைன், உம்மான், நஜ்ஜத், கஸ்ஸான், தூமதுல்ஜன்தல், யமன் முதலிய தேசாதிபதிகள் மனமுவந்து ஸ்ரீமுகத்தை ஏற்றுக்கொண்டு சத்திய இஸ்லாத்தைத் தழுவினார்கள். அபிஸ்ஸீனியாவின் அரசர் "தாங்கள் ஆண்டவனின் திருத்தூதரென்பதில் சற்றும் சந்தேகமேயில்லை யென்று ஆண்டவன் மீது சத்தியமாக நான் சாக்ஷியங் கூற முடியுமென்று" மரியாதை காட்டிபதில் நிருபம் அனுப்பினார். ரோமாபுரி அரசர் மனப் பூர்வமாய் இஸ்லாத்தை நேசித்தாராயினும் தன் தேசத்தில் நிறைந்துள்ள கிறிஸ்தவப் பிரஜைகளை நினைத்து மௌனஞ் சாதித்துவிட்டார். எகிப்து தேசத்தின் அதிபதியோ கண்ணியத்துடன் ஸ்ரீமுகத்தை ஏற்று எம்பெருமானாரவர்களுக்குப் பல சன்மானங்களை அனுப்பிவைத்துள்ளார். மற்றுஞ் சிலரோ ஸ்ரீமுகத்தை நிராகரித்தனர்.

## மக்காவைக் கைப்பற்றல்.

இவ்வாறு சிறப்புற்றோங்கி இஸ்லாம் பல்கிவரும்போது மக்கா வாசிகள் உடன்படிக்கையிற் கண்டுள்ள இரண்டாவது நிபந்தனையை மீறி முஸ்லிம்களுடன் நேச உடன்பாடு செய்துகொண்டிருந்த "குசாஆ" வென்னும் ஜாதியினரைத் துன்புறுத்தி அவர்களிற் சிலரை கஃபா (பரிசுத்த தேவாலயம்) வுக்கு நரபலியாகவுங் கொடுத்தனர். இம் முறைப்பாடு நபிகள் பெருமானாரவர்களுக்கு வரவே அவர்கள் மக்கா வாசிகளைச் சமாதானங்கேட்டதில் திருப்திகரமான பதில் வராமை கண்டு ஹிஜ்ரி 8-வது ஆண்டில் எம்மிறைத் திருத்தூதரவர்கள் 10000 முஸ்லிம் சன்மார்க்கர்களுடன் மக்காவை நோக்கிச் சென்று, எவ்வித எதிர்ப்புமின்றி ஒரு சொட்டு இரத்தமுஞ் சிந்தப்படாது கீர்த்திமிக்க ஜெயசீலராய் மக்காவினுள் பிரவேசித்து அந் நகரைக் கைப்பற்றியதும், தங்களது ஜென்ம சத்துருக்களாயிருந்துவந்த அந்நகரவாசிகளனைவரையும் மன்னித்ததுமன்றி சர்வ சுயேச்சையுமளித்துள்ளார்கள். நிகரற்ற இவ்வரிய குணவிசேஷத்தைக் கண்டுகளித்த குறைஷியர்கள் பேரன்பு பூண்டு மனமுருகியவர்களாய்த் தங்குதடையின்றி இஸ்லாத்தைத் தழுவுவாராயினர். என்னே! எம்மிறைத்தூதரவர்களின் இணையிலா வெற்றி; எட்டு வருடங்களுக்கு முன் எந்தவிடத்தில் எந்த மதத்தைப்பற்றிப் பிரச்சாரம் புரிந்துவந்ததில் சொல்லொணாத் துன்பங்களுக்கும், சகிக்க முடியா கஷ்ட நிஷ்டூரங்களுக்கும் ஈடுபட்டு முடிவாய், எந்த அவதார சிகாமணி தமது ஜென்ம நகரைவிட்டும் ஒழிந்து ஓடவேண்டி நேர்ந்துளதோ அதே மக்காவென்னும் நகரத்தைக் கைப்பற்றியதுமல்லாமல், அதே சன்மார்க்க இஸ்லாமிய மதத்தையும், அதே அவதார மூர்த்தியாகிய எம்பெருமானாரவர்களால் நிலைநிறுத்தாட்டப்பட்டுள்ளதென்பதை அறிந்தோர் யார்தான் அரூபமே சொரூபமாய் தன்னையன்றித் தனக்கு நிகர் வேறு யாது. இணையுமற்றோனாய் எங்கும் நிறைந்து நின்றிலங்கும் சர்வேஸ்வரனான மாக்ஷிமை தங்கிய அல்லாஹு சுபுஹான ஹுவத்தஆலாவை மனதார வாழ்த்தாதிருக்க முடியும். (அல்லாஹு அக்பர்) அவனே பெரியவன். இம் மட்டோடு நின்றுளதோ இல்லை; இல்லை. அவ் விசாலம்பொருந்திய

அரபியா தேசமுழுவதும் எம்பெருமானாரவர்களின் குடை நிழலின் கீழ் வந்துளது. அந் நாடனைத்திலும் சத்திய இஸ்லாம் சம்பூர்ணம் பெற்றுத் தனது ஜோதிமயமான பிரகாசத்தை எங்கும் ஜொலிக்க லாயிற்று. அத் தேசமெங்கும் ஒவ்வோர் மூலை முடுக்குகளிலும் வீதிகளிலும், ஒவ்வொரு வீடுகளிலும், கஃபாவென்னும் பரிசுத்த தேவாலயத்தினுள்ளும் குழுமிக்கிடந்துள்ள எண்ணற்ற விக்ரஹங்க ளனைத்தும் ஆழ்குழி தோண்டி புதைக்கப்பட்டன. அஞ்ஞான அனுச்சார அதர்மங்கள் யாவும் அந்நாட்டைவிட்டு இருந்தவிடம் தெரியாது மறைந்தொழிந்தன. ஏக தெய்வக் கொள்கையும்; நெறி தவறா இஸ்லாமிய தர்மங்களும் அந்நாடெங்கும் நிலைநிறுத்தாட்டப் பட்டன. இவ்வாறு அந்த உத்தம உலக சிரேஷ்டரவர்கள் சத்திய இஸ்லாத்தின் தத்துவங்களையும், உயரிய நோக்கங்களையும் இந் நாட் டில் சீருஞ் சிறப்பும்பெற நிலவச்செய்து அரசும்புரிந்துவந்ததுமல்லா மல் அந்நிய நாடுகளுக்கும் பிரச்சாரகர்களையனுப்பிச் சன்மார்க்கத் தைப் பெருகச்செய்துவந்தார்கள்.

## இறுதி ஹஜ்ஜூம் பொன்மொழியும்

இவ்வாறு இஸ்லாம் விருத்தியடைந்துவருஞ் சமயத்து வெற்றிக் கனிகலமான ஹிஜ்ரி 10-வது ஆண்டு எங்கள் நாயகமவர்கள் தமது வாழ்க்கையில் இறுதியான ஹஜ்ஜை நிறைவேற்றிவிக்கும் பொருட்டு மக்காவுக்குப் பிரயாணித்துவந்து அதனருகேயுள்ள (அரபாத்) என் னும் மைதானத்தில் ஒருலக்ஷத்து ஐம்பதினாயிரம் இஸ்லாமியப் பக் தர்களோடும் ஹஜ்ஜூக்குரிய சகல கடமைகளையும் செவ்வனே நடாத்தி முடிவுபெற்றதின்பின், எம்மிறைத்தூதர்கட் கதிபரவர்கள் தங்கள் ஏறுவாகனத்தின்மீதேறி யிருந்துகொண்டு இதனடியிற் வரு மாறு பொன்மொழி பகர்ந்தார்கள்.

ஒ ஜனங்களே ! என் வார்த்தைகளைச் செவிமடுத்து நன்கு கவனமாய்க் கேட்பீர்களாக ; ஏனெனில் அடுத்துவரும் வருடத்தில் இதே ஸ்தலத்தில் உங்களுக்கிடையே நான் இருந்துவரக்கூடுமென்று என்னால் சொல்ல முடியவில்லை. ஆகவே, இந்தவிடத்தையும், இம்

மாதத்தையும், இன்று தெய்தியையும் நீங்கள் எவ்வாறு பரிசுத்தமாய் கருதுகிறீர்களோ அவ்வாறே உங்களதாவியும், செல்வமும், உங்கள் மகிமையும், முடிவுநாள்வரை உங்களுக்கிடையே ஒருவருக்கொருவர் அபகரிக்கக்கூடாததாயும் பரிசுத்தமானதாயுமிருக்கும். அஞ்ஞான காலத்து அனுச்சாரங்களனைத்தும் இன்று என் காலின் கீழாய்விட்டன. எனக்குப் பின் நீங்கள் ஒருவரோடொருவர் பகைமை பாராட்டி ஒருவர் கழுத்தை ஒருவர் வெட்டி வழிகேட்டில் சென்று விடவேண்டாம். நியாயத்தீர்ப்பு நாளில் நீங்கள் உங்கள் ஆண்டவனைச் சந்திக்க நேரும்பொழுது உங்களுடைய ஒவ்வொரு செய்கையும் கணக்கெடுக்கப்படும். உங்கள் மனைவிகள்மீது உங்களுக்கு எவ்வளவு சுதந்தரம் உண்டோ, அதே சுதந்தரம் அவர்களுக்கும் உங்கள் மீதுண்டு; ஆகவே, உங்கள் மனைவிகளை இரக்கத்துடன் அன்பு பாராட்டி நடத்துங்கள். நீங்கள்தான் அவர்களுக்காக ஆண்டவனிடத்துப் பொறுப்புள்ளவர்களாவீர்கள்.

அத்துடன் உங்கள் அடிமைகளையும் நேர்மையாய் நடத்துங்கள். நீங்கள் உண்ணும் ஆகாரத்தையே அவர்களையும் உண்ணச் செய்யுங்கள். நீங்கள் அணியும் ஆடைகளேபோன்று அவர்களையும் அணியச் செய்யுங்கள்; அவர்கள்மீது குற்றங் காணப்படின் மன்னியுங்கள். மன்னிக்கத்தகாத குற்றங்களாயிருப்பின் உங்களைவிட்டும் அவர்களை விலக்கிவிடுங்கள்; ஏனெனின், அவர்களும் ஆண்டவனின் தாசர்களே. அவர்களைக் கடுமையாய் நடத்துதல கூடாது. ஜனங்களே! எனது ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாய்க் கேளுங்கள். அரபியரல்லாதாரைவிட அரபிகள் மேன்மக்களல்லர்; அதேபோன்று அரபியரைவிட அரபியரல்லாதார் மேன்மைவாய்ந்தவரல்லர். நாம் யாவரும் நமது ஆதித் தந்தையாகிய ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சந்ததிகளேயாவோம். ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மண்ணினின்றும் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். முஸ்லிம்கள் யாவரும் ஒருவருக்கொருவர் சகோதரரென்பதை உணர்வீர்களாக. நீங்கள் ஒரே சகோதரத்துவமுள்ளவர்களென்பதை மறந்துவிடாதீர்கள்.

அன்னியர் பொருளை அவனிஷ்டமின்றி நீங்கள் அபகரிப்பது

நியாயமாகாது. அநியாயம் செய்வதினின்றும் நீங்கள் உங்களைக் காப்பாற்றிக் கொள்வீர்களாக. லேவாதேவித் தொழில் நிராகரிக்கப்பட்டுவிட்டது. என் சிறிய தந்தையரான அப்பாஸ் [ரலி] அவர்களிடமிருந்து வட்டி மன்னிக்கப்படுதல் ஆரம்பமாகும். ஆகவே, கடன்பட்டவன் முதலைமாத்திரம் திருப்பிச் செலுத்தக்கடவன். பண்டைய காலத்து முதலாளித்துவம் என் காலின்கீழ் மிதிக்கப்பட்டுவிட்டது. நான்உங்கள்முன்னிலையில் ஒரு அரியபிரமாணத்தை விட்டுவைத்துப் போகிறேன். அதை நீங்கள் தவறாது கடைபபிடித்தொழுகும்வரை நீங்கள் தவறான பாதையில் சென்றுவிட்டவர்களாகமாட்டீர்கள். அது ஆண்டவனின் திரு-குர்ஆனேயாகும். இங்கு எனது உபதேசத்தைச் செவிமடுத்த நீங்கள் ஒவ்வொருவரும் இங்கு ஹாஜரில்லாத ஏனைய சகோதரர்களுக்கு அறிவிக்கப்படல் வேண்டும். ஏனெனின், உங்களைவிட உங்களிடமிருந்து அறிந்துள்ளவர்கள் நன்றாய் மனதில் பதியவைத்திருக்கக் கூடும். எனது வார்த்தைகளைச் செவியேற்ற நீங்கள் யாவரும் நன்றாய் மனதில் பதியவையுங்கள்.

இவ்வாறு, இவ்வரிய சொற்பொழிவை நிகழ்த்தி முடித்துவிட்டு ஜனங்களே! ஆண்டவனால் என்மீது விதிக்கப்பட்டுள்ள கடமைகள் அனைத்தையும் உங்கள்முன் சரிவர நடத்திவிட்டேனென்றே நினைக்கிறேனென்று கூறியதும், ஜனங்களனைவரும் "ஆண்டவனின் திரு நபியே! தாங்கள் தேவ கட்டளையை எங்களுக்குச் சரியாயறிவித்தீர்களென்றும், தீர்க்கதரிசிக்குரிய சகல கடமைகளையும் செவ்வனே நிறைவேற்றி முடித்தீர்களென்றும் ஏகோபித்துக் கூறினார்கள். உடனே திரு நபியவர்கள் தங்கள் இரு கரங்களையும் வானத்தை நோக்கி உயர்த்தி " ஆண்டவனே! நீயே சாக்ஷியாயிருக்கக் கடவாய்" என்று மூன்று தடவை கூறியதும், ஆண்டவன் சன்னிதானத்திலிருந்து

· இன்று தினம் பரிசுத்த இஸ்லாத்தைச் சம்பூர்ணமாக்கினோம்;
என் அருட்கொடையையும் உங்கள்மீது பரிபூர்ணமாக்கினோம்"
திரு. குர்ஆன் 5:3

என்னும் புர்கானுல் அலீமின் இறுதியான வாக்கியங்கள் வஹீயின் மூலமாய் எம்பெருமானாரவர்களுக்கு அருளப்பட்டது. இத்துடன் திரு. குர்ஆனும், வஹியும் பூர்த்தியடைந்துள்ளன.

## மரணம்

இவ்வாறு இது காரியாதிகளை முடித்துவிட்டு நபிகள் பெருமானரவர்கள் மதீனாவுக்குச் சென்று அதிக நாள் ஜீவித்திருக்கவில்லை. சில மாதங்கள் கழிந்ததும் சொற்ப ஜுரத்தினால் பீடிக்கப்பட்டு, ஹிஜ்ரி 11—ம்வருடம் ரபியுல்அவ்வல்மீ 12-உக்குச் சரியாய் கி. பி. 632—ம்வருடம் ஜுன்மீ 8-உ திங்கட்கிழமை மாலை ஆண்டவன்மீது தங்கள் ஹிருதயத்தைச் செலுத்தியவர்களாய் நிலையிலா இம்மண்ணுலக வாழ்க்கையை நீத்து சுவனபதியடைந்தார்கள்.

> "உறுதியாகவே நாம் அல்லாஹுத் தஆலாவின்
> தாசர்களாகயிருக்கிறோம்; ஆதலின், நாம்
> அவனிடத்தில் உறுதியாய்ச் செல்வோம்."

—அல்குர்ஆன் 2: 156.

எல்லாம் வல்ல இறைவன் நம்மனைவோரையும் மேன்மையான பாதையில் சீர்மையாக நடாத்துவானாகவும்.

# பிற மதஸ்தர்களின் அபிப்பிராயங்கள்.

இஸ்லாத்தைப்பற்றியும், அதன் ஸ்தாபகரான எம்பிறைத் தூதரவர்களைப் பற்றியும், அயல் மதவாதிகளில் மிகவும் முக்கியஸ்தர்களாயுள்ளவர்கள் எழுதியுள்ள மதிப்புரைகள் கணக்கற்றிருக்கின்றன. ஆயினும், அதில் சிலருடைய அபிப்பிராயங்களை மட்டும் இங்கு தருகிறோம் :—

"அரேபியாவை அநேக தலைமுறைகளாகவே மூடிக்கொண்டிருந்த மூடபக்தியின் அநேக தீயஹம்சங்களையெல்லாம் இனியொரு முறையும் தலைகாட்டமுடியாதவாறு அது (இஸ்லாம்) தொலைத்துவிட்டதென்றே நாம் தாராளமாக ஒப்புக்கொண்டுவிடலாம். இஸ்லாத்தின் அரிய பிரகாசத்தின்முன் விக்ரஹத்தொழும்பு அறவே மறைந்தொழிந்தது. ஏக தெய்வக்கொள்கையும், எங்கும் நிறைந்திருக்கும் அப் பராபர வஸ்துவாகிய ஆண்டவனின் முடிவில்லா பரிபூரணத் தன்மையையும், முஹம்மதின் ஹிருதயத்துள் எவ்வாறு வேரூன்றப்பட்டனவோ அதைப்போலவேதான் அவரைப் பின்பற்றுகிறவர்களின் ஹிருதயங்களுள்ளும் ஜீவித வாழ்க்கையிலும் ஓர் உயிர்பெற்றியங்கும் தத்துவமாக மாறிவிட்டன. ஆண்டவனின் நாட்டத்திற்கு முற்றும் அடிபணிந்து சிரங்குனியவேண்டுமென்பதேதான். (இஸ்லாம் என்பதின் மூலக்கருத்து இதுவே) அம் மதத்தின் முதன்மையான அம்சமாகும். அதில் சமூகாச்சார நல்லொழுக்கங்களும் குறைபாடாய்த் தென்படவில்லை. அம் மதவாதிகளின் வட்டத்திற்குள்ளே சகோதர வாஞ்சையென்பதே போதிக்கப்படுகிறது. அனாதைக் குழந்தைகள் ஆதரிக்கப்படல் வேண்டும். அடிமைகள் அன்புடன் நடத்தப்படல் வேண்டும். மதுபானங்கள் மறுக்கப்பட்டிருக்கின்றன. ஆதலின் முஹம்மதிய மதம் வேறெந்த மத தார்மத்திற்கும் தெரியாத அத்தகைய மதுவிலக்குப் பிரச்சாரம் குறித்து சிறிது பெருமையே பாராட்டிக்கொள்ளலாம்". —**ஸர் வில்லியம் மூர்.**

"நான் முஹம்மதுவுடைய மதத்தை எப்பொழுதும் உன்னத நோக்கமுடனேயே நினைத்துக்கொண்டிருக்கிறேன். ஏனெனில்

அதனுடைய அற்புதமான ஜீவ சக்தியைப்பற்றி வியந்ததுதான் காரணமாகும். அந்தந்த காலத்துக்கும் ஏற்றவாறு ஒத்துவரக்கூடிய படி தன்னைத்தானே செய்துகொள்ளக்கூடியதும் உலக வியாபகத்தின் மாறுதல்களுக்கேற்பச் சகலவிதமான ஒப்பில்லாக் கொள்கைகளை யுடையதுமான ஒரே மதம் இஸ்லாம்தானாகும். என்னைப் போன்ற பெரிய மனிதர்களின் புத்தி தீக்ஷண்யத்திற்கு உலகம் உயர்ந்த மதிப்பு வைக்கவேண்டுமென்பதில் சற்றும் ஐயமில்லை. முஹம்மதின் மார்க்கமானது நாளை ஐரோப்பா முழுமைக்குமே ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய மார்க்கமாக ஆகிவிடுமென்று முன்னொரு முறை புத்திசாதுர்யத்தோடு கூறியிருந்தேன். ஏனெனின் அஃது இற்றை ஐரோப்பாவால் அங்கீகரித்துக்கொண்டே வரப்படும் ஒரு மார்க்கமாக ஆகிவிட்டதென்பதனாலேயே. மத்திய காலத்து கிறிஸ்தவ மார்க்கப் பாதிரிகள் மௌட்டீகத்தினாலோ அல்லது மூட பக்தியுள்ள மதவெறியினாலோ இஸ்லாம் மதத்தைத் தவறான வழியிலெல்லாம் பிரச்சாரஞ்செய்து இஸ்லாத்தின்மீது அடாப்படார்மொழிகளைக் குவித்தும் வந்தனர். அவர்கள் உண்மையிலேயே முஹம்மது என்னும் மனிதரையும், அவருடைய மதத்தையும் ஒன்றுசேர்ந்து வெறுக்கவே தயாரிக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கு முஹம்மது என்பவர் தஜ்ஜாலாகவே தோன்றுகின்றார். நான் அந்த அற்புத மனிதரைப்பற்றி நன்றாய்ப் படித்து உணர்ந்திருக்கிறேன். ஆனால், என் அபிப்பிராயமானது அவர் ஒரு தஜ்ஜால் என்பதற்கு நெடுந்தூரத்திற்கப்பால் போய்விட்டது. அவரை மனித சமூகத்தின் இரட்சகரென்றே கூறியமைதல் வேண்டும். அவரைப்போன்று (முஹம்மது) ஒரு மனிதர் உலகத்தின் தலைவர் ஸ்தானத்தை ஏற்றுக் கொள்ளுகிறதாயிருந்தால் உலகத்தின் பிரச்சினைகளை தற்போது உலகம் பெரிதும் கோரிநிற்கும் சாந்தியையும் சமாதானத்தையும் கொண்டுவரக்கூடிய முறையில் தீர்த்துவைப்பதில் அவர் வெற்றி பெற்றுவிடுவாரென் நம்புகிறேன்''.

—மிஸ்டர் ஜார்ஜ் பேர்னார்டு ஷா.

''முஹம்மது வெறும் சூன்யமென்றேனும், வேஷதாரியென்றேனும், வேண்டுமென்றே பேரவாவுடன் வேலைசெய்துவந்த தந்

திரக்காரரென்றேனும் நாம் ஒருபோதும் கருதமாட்டோம். நாம் அவரை அவ்வாறு கருதத் துணியவுமாட்டோம். அம்மனிதருடைய வார்த்தைகள் அசத்திய மொழிகளல்ல. இத்தரணியிற் அன்னவரிழைத்துவந்த காரியங்களும் அசத்தியச் செயல்களல்ல. சூன்யமல்ல. வெறும் வேஷமல்ல. இயற்கையின் சொந்தப் பெரிய அகடுக்குள்ளிருந்தே வெளியாக்கப்பட்ட அக்கினி வேகந்தாங்கிய ஒரு ஆன்மாவின் திரண்ட உருண்டையாகும். இவ் வுலகினையே கிளப்பிவிடுதற்கு இவ்வுலக சிருஷ்டி கர்த்தாவே அதனை அவ்வாறு ஆக்ஞாபித்திருந்தான்".

—தாமஸ் கார்லைல்.

"அரப் நாட்டு மக்களுக்கு முஹம்மது முஸ்தபா [ஸல்] அவர்கள் புத்துயிரளித்தார்களென்றே கூறல் வேண்டும். எங்கு பார்க்கினும் விக்ரஹ ஆராதனையும், மூட வழக்கங்களும் நிறைந்திருந்த நாட்டில் பரிசுத்தமான ஏக தெய்வக்கொள்கையை அவர் நிலைநாட்டினர். அநேக மக்களிடை நிகழ்ந்துவந்த அனுச்சாரங்களைப் போக்கி அவர்களைச் சீர்திருத்தினர். அவர் மக்களிடையே ஒழுக்கத்தை வளரச் செய்து தொழுகையில் பகுத்தறிவிற்கேற்ற நல்லறிவை அவர்களுக்குண்டாக்கினர்".

—ரேவரேண்டு ஸ்டீபன்ஸ்.

"உலகத்தில் இஸ்லாமிய மதம் வாளின் முனையால் பலவந்தமாகப் பரத்தப்பட்டதென்பதும், தங்களது ஆக்ஷிக்குட்பட்ட மக்களை முஸ்லிம்கள் வாள்முனையைக்கொண்டு பயமுறுத்தி முஸ்லிம்களாக்கினர் என்று கூறுவதும் பெரும் ஆபாசமான கட்டுக்கதைகளேயாகும், அல்லது வீண் பிரமையென்னலாம்".

—ரேவரேண்டு லேசி ஓ. லியரி, டி.டி.

"இஸ்லாம் மதமானது சுறுசுறுப்பையும், பாரமார்த்திக வெளிகை ஞான வளர்ச்சியையும், தக்க ஒழுங்குகளையும், சட்டத்தையும், தன்னடக்கத்தையும், தன்னலத் தியாகத்தையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது." —ரேவரேண்டு எட்வர்டு பிளேட்டன்.

"திரு. குர்ஆன் பரிசுத்தமானதும், அறிவுக்கொத்ததும் அநேக அரிய போதனைகள் நிரம்பியுள்ளதுமான திருமறையாகும்".

—மிஸ்டர் டப்பிள்யூ இர்விங்.

"உலகமக்களின் ஹிருதயங்களை இஸ்லாத்தின் பக்கல் கவர்ந்து கொள்ள திரு. குர்ஆன் ஒன்றே போதுமானது. இஸ்லாம் மதத்தை அபிவிருத்திசெய்வதற்கென முஸ்லிம்கள் தங்கள் ஆடையாபரணங் களை விற்றுக் கிறிஸ்தவர்களிடமிருந்து கத்தி, துப்பாக்கி, பீரங்கி போன்றவைகளை வாங்கவேண்டிய அவசியமில்லை".

—ஸ்வோர்டு அண்டு ரேலிஜியன்.

" அரேபியர் விரைவாகவும், அற்புதமாகவும் மாற்றமடைந்த தைப்போல் இத்தரணியில் ஒரு ஜாதியாரும் அற்புதமானதும், உல கம் போற்றத்தக்கதுமான் மாற்றத்தையடையவில்லை".

—மிஸ்டர் போஸ் வர்த்ஸ்மித்.

"இஸ்லாமானது, வியபிசாரம், பேராசை, தற்பெருமை, வட்டி வாங்குதல், பெரும் பொருளாசை, அவதூறு, கோள், உலோ பம், உலோகாயத எண்ணங்கள், கபடம் ஆகியவைகளைக் கண்டித்து தர்மஞ்செய்தல், பக்தி, ஆண்டவனிடம் நன்றி; நீதி, அனாதை மக் களை ஆதரித்தல், கற்பு, வார்த்தைச்சுத்தம், பொறுமை, அடக்கம், பணிவு, மன்னிப்பளிக்குங்குணம், தீயன புரிந்தார்க்கும் நல்லன புரி தல், நல்ல பாதை, உலோகாயத எண்ணங்களுடன் செல்லாமல் ஆண்டவனையடையும் நோக்கத்துடன் செல்லுதல் போன்ற உத்த மோத்தமமான குணங்களைக் கற்பிக்கின்றது."

—மிஸ்டர் ஜே. டேவன்போர்ட்.

" முஹம்மது நபியின் சரித்திரம் முடிவில்லாத நீண்ட சங்கிலி யாக விருக்கிறது. ஆனால், அதில் ஓர் இடம் சம்பாதிப்பது மிகவும் கண்ணியமானதாகும்". —புரோப்பஸர் மார்க் கோலியத்.

" நீதிநெறி வகுத்தோரும், வெற்றி பல கொண்டோரும் ஆகிய வர்களில் எவருடைய ஜீவியச் சரித்திரமும் முஹம்மது நபியின் வாழ்க்கைச் சரித்திரத்தைப்போன்று மிக விரிவான விஷயங்களை யடங்கியதாயும், உறுதியான உண்மையுள்ளதாயுமில்லை யென்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை". —மிஸ்டர் ஜாண்டியூன் போர்டு.

"முஹம்மது நபியவர்களின் வெற்றிக்கு அவரது தீவிர பார மார்த்திக சக்தியே காரணமன்றி வாளின் சம்பந்தமே கிடையா தென்பதில் சற்றேனும் சந்தேகம் கிடையாது. இதுவரை வந்துள்ள

எல்லா தீர்க்கதரிசிகளுள்ளும், மதோபதேசகர்களுள்ளும் அரேபிய தீர்க்கதரிசியே மகா வெற்றியுடையவராவார்".

—என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிக்கா.

"யான் மிக்க பயபக்தி விசுவாசத்துடனே இதைச் சொல்ல முன் வருகிறேன். உண்மையில் சகல நன்மைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள பரிசுத்த மேலான ஒரு மார்க்கம் ஆண்டவனிடமிருந்து வெளியாயிருக்கிறதென்றால் அது முஹம்மதுவுடைய மார்க்கமாகவே யிருக்கிறது. பரோபகாரமும், நம்பிக்கைக்குரிய மனே உறுதியும் நன்மை தீமையின் முழு ஆராய்ச்சியும், தீமையை விலக்கக்கூடிய நல்வழிகளுமே தெய்வீகத்துக்குத் தக்க அடையாளமாயிருக்கின்றன வெனின் முஹம்மதுவுடைய மிஸ்ஸனே தெய்வீகமானதென்பதில் சந்தேகமில்லை".

—டாக்டர் லட்டீஸ்

"வேதாகம இதிகாச புராணங்களின் காலங்கள் மலையேறிவிட்டன. ஆனல், திரு. குர்ஆன் இப்பொழுது உலகத்திற்கு வழிகாட்டி யாயிருக்கிறது".

—சீக்கிய மதஸ்தாபகர் பாபா குருநானக்.

"இஸ்லாம்தான் ஜனநாயகக் கொள்கையை முதன்முதலாக உபதேசம் புரிந்தும், உதஹரித்துங் காட்டிய மதமாகும். ஏனெனின், மஸ்ஜிதிலுள்ள மினராவிலிருந்து கூப்பாடு (பாங் சப்தம்) கேட்டவுடனே வணக்கத்திற்குரியவர்களெல்லோரும் ஒருங்குசேர்ந்து குழுமுங்கால் இஸ்லாத்தின் ஜனநாயக தத்துவம் ஒவ்வொரு நாளிலும் ஐந்துநேரங்களிலும் அதிகம் பதிந்து காணப்படுகின்றது. அதுபோது ஆண்டியும் அரசனும் தோளோடு தோள்புரள நின்றுகொண்டு 'ஆண்டவனே மகா பெரியவன்" என்று பஹிரங்கப்படுத்துகின்றனர்கள். ஒரு மனிதனை மற்றெரு மனிதனுடைய சகோதரனுக இயற்கையிலேயே செய்துவருகின்ற இத்தகைய பிளக்கமுடியாத இஸ்லாத்தின் ஒற்றுமையைக்கண்டு நான் மீண்டும், மீண்டும் இறும்பூதெய்துவதுண்டு. ஓர் எகிப்து தேசத்தானையும், ஓர் அல்ஜீரியா மனிதனையும், ஓர் இந்தியனையும், ஒரு துருக்கியனையும் லண்டனில் நீங்கள் சந்திப்பீர்களாயின் ஒருவனுடைய ஜன்ம பூமி எகிப்தாயிருந்தாலென்ன; மற்றெருவனுடைய ஜன்ம பூமி இந்தியாவாயிருந்தாலென்ன" என்றே நினைப்பீர்கள்.

—இந்தியக் கவி மிஸஸ். சரோஜினி தேவி.

"இஸ்லாம் உச்சஸ்தானத்திலிருக்கும்பொழுது அது இதர மதங்களிடத்து சகிப்புத்தன்மை காட்டாமலிருந்ததில்லை. தவிரவும், அது, முழு உலகத்தின் நன்மதிப்பையும் பெற்று சிறந்து விளங்கியது. மேல்நாடு அந்தகாரத்தில் ஆழ்ந்திருந்த சமயம், கீழ்நாட்டில் மிகவும் பிரகாசம் பொருந்திய நக்ஷத்திரமொன்றுதயமாகி உலகத்திற்கு அறிவுச் சுடரையும், ஆற்றலையும் அளித்துளது. இஸ்லாம் எப்படிப்பட்ட மார்க்கமென்பதை அறிய ஹிந்துக்கள் பயபக்தியுடன் முயற்சிக்கட்டும். அவ்வாறு முயற்சி செய்வார்களானல் என்னைவிட அதிகம் அவர்கள் இஸ்லாத்தை விரும்புவார்கள். நபி பெருமானாரவர்களின் நண்பர்களுடைய சரித்திரத்தை நான் வாசித்து முடித்ததும் நபிகள் பெருமானாரவர்களின் சரிதையையே வாசிக்க ஆரம்பித்தேன். இரண்டாவது, வால்யூம் முடிந்ததும் அந்த மகத்தான ஜீவியத்தைப்பற்றி வாசித்தறிவதற்கு வேறு புத்தகம் இல்லையேயென வருந்தினேன். உலக சரித்திரத்தில் அந்தக் காலத்தில் இஸ்லாத்துக்கு உயரிய ஸ்தானத்தை அளித்தது வாள்பலம் அல்லவென்று எவ்வித சந்தேகமுமின்றி இப்பொழுது உணர்ந்து கொண்டேன். நபி பெருமானாரவர்களின் உறுதியான எளிய வாழ்க்கையும், சுயநலத்தியாகமும், வார்த்தையைக் காப்பாற்றவேண்டுமென்பதில், அவர்களுக்கிருந்துவந்த மட்டிலடங்கா ஆர்வமும், அவர்களைப் பின்பற்றியவர்களிடமும், நண்பர்களிடமும், அவர்களுக்கிருந்த அளவு கடந்தபக்தி விசுவாசமும் அவர்களின் வீரமும், மனோ உறுதியும், தங்கள் தூதிலும் ஆண்டவனிடத்தும், அவர்களுக்கிருந்த பூரண நம்பிக்கையுமே இஸ்லாத்தை உன்னத பதவிக்கு உயர்த்தின. அவர்களின் வேலைக்குக்குந்தகமாக, நின்ற சகல தடைகளையும் நீக்கி, அவர்களுக்கு எத்திசைகளிலும் வெற்றியைத்தந்துளது இவ்வரிய குணங்களேயன்றி வாள் அல்ல, ஸ்பெயின் தேசத்தை நாகரீகப்படுத்தியது இஸ்லாம், மொரோக்கோ தேசத்துக்கு அறிவுச் சுடரை கரத்தில் ஏந்திச்சென்றது இஸ்லாம். உலகத்தவருக்கு சகோதரத்துவத்தைப் போதித்ததும் இஸ்லாமே. ஐரோப்பியர்கள் இஸ்லாத்தைப் பற்றிப் பயப்படுவதற்கு காரணமில்லாமலில்லை. ஏனெனின், கிறிஸ்துவ மதத்தைச்சாரும் எந்தமனிதனும் அதன் காரணமாக இதர கிறிஸ்துவர்களுடன் சம அந்தஸ்து பெறுவதற்கில்லை யென்பதும்,

ஆனால், அதே மனிதன் இஸ்லாமிய மதத்தைத்தழுவினால் அது நிமிஷமே அவன் ஒரு முஸ்லிமின் சகல ஹந்தஸ்தும் பெற்றவனாய் இதர முஸ்லிம்களுடன் ஒரே கோப்பையிலிருந்து நீர் பருகுவதையும், ஒரே பாத்திரத்திலிருந்து உணவு அருந்துவதையும் நான் கண்கூடா கப்பார்த்திருக்கிறேன்".

—மஹாத்மா காந்தி.

"பிரான்ஸ் தேசத்து ராஜீயப் புரட்சி தோன்றுவதற்கு வெகு காலத்துக்கு முன்னரே, இஸ்லாம், சுதந்தரத்துக்கும் சமத்துவத்திற்கும் சகோதரத்துவத்திற்கும் கொடிபிடித்துநின்றது".

—அறிஞர், டி. எல். வஸ்வானி.

"பண்டைய காலத்திய ஐரோப்பா கண்டமுழுவதும் மிருகப் புத்திப் படைத்துள்ள காட்டு மிலேச்சர்களின் படையெழுச்சியின் காரணமாக வாயால் வர்ணித்துக்கூற முடியாத அத்தனைக் காரிருள் சூழ்ந்த ஆழிய அந்தக்காரத்துள்ளும், நிவர்த்திக்கமுடியாத மந்தகாரத்துள்ளும், மூழ்கி வீழ்ந்து கிடந்தபோது, இஸ்லாம் அவ்வெடிப்புக்குள் தலையிட்டு, தனது பேரிலக்கிய ஞானத்தின் அடிமுளைகளை மிக்க உற்சாகத்துடனும், விடாமுயற்சியுடனும் போஷித்து, அவற்றினைச் சத்தியத்தினாலும், சுதந்தரத்தினாலும், உண்டுபண்ணப்பட்ட பரமாணு மண்டலத்தில் பூத்துக் காய்த்துப் பழுத்துப் பலன்தருமாறு வளர்த்திராதிருப்பின் அந்நாட்டில் (ஐரோப்பா) நவீன நாகரீகமென்பது என்னவாயிருக்குமென்று யான் கடாவுகின்றேன்"

—டாக்டர் பி. ஸீ. ராய்.

"உண்மையில் ஹஸரத் முகம்மது நபிகள் நாயகம் (ஸல்) ஒரு சிறந்த மதத்தலைவராகவும், சமூகப்பெரியாராகவும், ஒப்பற்ற அரசராகவும், இணையிலா ராணுவத் தந்திரியாகவும், யுத்த வீரராகவும், சாந்த ஸ்வரூபியாகவும், குதிரைச் சவாரியில் சிறந்த வீரராகவும் சத்தியக்கிரஹியாகவும், மற்றுமுள்ள எல்லாத்துறைகளிலும் நிகரற்ற பெரியாரர்கவும் வாழ்ந்திருக்கின்றார்கள். முஹம்மது நபி (ஸல்)க்கு சமமான புருஷசிரேஷ்டர் இதுகாறும் இம் மண்புவியில் அவதரித்ததேயில்லை".

— டில்லி ஸ்ரீமான் லாலா அமர்சந்த்.

“ இஸ்லாமிய மதம் பல அரிய தத்துவங்களையுடையதாயிருக்கிறது. இதர மதத்தினரை மிக்க நட்பாகவும், சிநேகமாகவும் நடத்தக்கூடிய மார்க்கம் இஸ்லாமிய மதம் ஒன்றுதான். சொத்துரிமை, ஆண் பாலர்களுக்கிருப்பது போலவே பெண் பாலர்களுக்கும் இஸலாமிய மார்க்கத்தில் இருக்கிறது. இஸலாமிய மதத்தால் உலகத்துக்கு பெருத்த நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன.

—ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர்.

“ எனது ஹிருதயத்துள், பக்தியையும் விசுவாசத்தையும், நன்மதிப்பையும் பதியும்படி செய்தது முஹம்மது நபி (ஸல்) அவர்களது மேன்மைகளில் முதன்மையானது மிகவும் மூர்க்கர்களாயிருந்த அப்பண்டைய காலத்து அரபியர்கள் ஒரு மித்த மனத்தினராய் அந்த தீர்க்கதரிசியை (முஹம்மத் ஸல்) “ அல்அமின் ” (நம்பிக்கைக்குரியவர்) என்று போற்றியதேயாகும். சுருங்கக்கூறுமிடத்து, இவ்வாறே ஹிந்துமதத்தைச் சார்ந்துள்ள பெரியார்களில் பல மேதாவிகளும், பல தலைவர்களும், தலைவிகளும் நன்னோக்கத்துடனேயே முஹம்மத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மிகவும் போற்றிக் கூறியுள்ளார் களென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஹிந்துமதப் பெரியார்களில் பல்லோர் முஹ்ம்மது (ஸல்) அவர்கள் மீது அதிக அபிமானம்பூண்டு பல கவிகளும், கீர்த்தனங்களும் இயற்றியிருக்கின்றனர். உதாரணமாக (ஸ்ரீமான்) லாலா லால்சந்த், லக்ஷ்மணபுரி பண்டிதர் பிரபுதயாளர், (ஸ்ரீமான்) லாலா தல்லுராம் கௌசரி, டில்லி பண்டிதர் கணேசலால் கஸ்தமஹார்ஸா, மஹாராஜா ஸர். கிருஷ்ணபிரசாத் (ஹைதராபாத் மந்திரி சபையின் தலைவர்) (நிஜாம் ராஜ்யம்) முதலிய பல அறிஞர்களான மேதாவிகளெல்லோரும் முஹம்மத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது புகழ்பாக்களைப்பாடியிருப்பது வடநாடு முழுவதும் பிரபல்யமாயிருப்பதைத் நீங்களும் அறிந்திருக்கக்கூடும். மேலும், நான் இஸ்லாம் மதத்தின்மீதும் அதன் ஸ்தாபகரான முஹம்மத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் கொண்டிருக்கும் நந் நம்பிக்கையை யொத்து என் ஹிந்து சகோதரர்களுள்ளும், பல்லோர் நல்லபிப்பிராயங்கொண்

டிருப்பதற்காக நான் மிகவும் சந்தோஷமடைகின்றேன். இத் தகைய சமாதான நல்லெண்ணம் இதர எல்லா ஹிந்து சகோதரர் களுடைய ஆத்மாக்களுக்குள்ளும் நிலவி நிற்கவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். மேலும் ஏகேஸ்வரனை ஆண்டவன் அந்த முஹம்மத் நபி (ஸல்) அவர்கள்மீது என்றென் றைக்கும் சாந்தியும், சமாதானமும் அருள்வானாக. அவரது சமரச தத்துவத்தை இவ்வுலக மன்பதைகள் யாவர்பாலும் சமமாக நிலவச் செய்வானாக. அதன் மூலமாய் சகோதரத்துவம், சமத்துவம் ஆகிய வற்றை உண்டாக்குவானாக. அந்த உலக சிரேஷ்டர் (முஹம்மத்) (ஸல்) பொருட்டாக எல்லோருக்கும் நலலருள் புரிவானாக.

—டாக்டர் அன்னிபெசண்ட்.

## வெற்றியடைந்துள்ள தீர்க்கதரிசி

"அரேபியா தேசத்தின் ஆசூாரங்களனைத்தையும் தற்சமய முள்ள உயர்நிலைமைக்கு கொண்டுவரும் விஷயத்தில் முஹம்மத் (ஸல்) தம்முடைய நாட்டங்களையெல்லாம் உபயோகப்படுத்தியிருப் பதைக் காண்கினும் உன்னதமான தோற்றம் வேறு ஒன்றினையும் மத சம்பந்தமான சரித்திரங்களில் காணக்கிடைக்கவேமாட்டோம். அவருடைய வாழ்நாளில் அவருடைய தேசத்திலேயே வசித்துவந்த மக்களின் உயிர்வாழ்க்கையை ஓர் உன்னத உயரிய நிலைமைக்குக் கொண்டுவந்ததில் அவர் [முஹம்மத்] (ஸல்) அம் மத்தியகால அரப் தேயத்தின்கண் யூதமதமேனும், கிறிஸ்து மதமேனும் சாதித்திருக்க முடியாத வெற்றியையே சாதித்திருக்கிறாரென்று சொல்லுவதோடு அவருக்கு என்றென்றும் கியாதி உண்டாகக்கூடிய முறையிலேயே கூறியமைதல்வேண்டும்; இம்மட்டுமோ முஹம்மத் (ஸல்) செய்து வைத்துள்ள அந்த நாகரீக முதிர்ச்சியின் பயனாக அவர் அரப் தேயத் திற்கு மட்டுமல்லாது அகில உலகத்துக்குமே விலைமதிக்கவொண்ணாத ஊழியத்தையும் புரிந்திருக்கிறார்".

—மிஸ்டர் ஆல்பிரட் மார்ட்டின்.

## மஹா பகுத்தறிவுள்ள மதம்.

"இஸ்லாம் தனக்குரிய உலகப்பிரசித்தி பெற்ற இயற்கையினுலே வெவ்வேறு நாட்டுப் பகுதிகளிலும் இந்த தீர்க்கதரிசி தோன்றி முதன்முதலில் குர்ஆனை உபதேசித்து வந்த அந்த அரபிகளைப் போன்ற முற்றிலும் மாறுபட்டு நிற்கும் சமூக ஆசூார, பொருளாதார நிலைமைகளிலும் வசித்துவந்த கோடிக்கணக்கான மனிதர்களை எல்லாம் ஒன்றுசேர்த்துப் பிணைத்திருக்கின்றது. இஸ்லாம் மஹா புத்திக்குப்பொருத்தமான மதமாகவே தன்னை ருஜூப்பித்துக் காட்டியிருக்கின்றது. எவ்வாறெனின், இது தன்னுடைய முற்போக்கின் காலத்திலே—வஹீயின் (தேவஞான வெளிப்பாட்டின்) உயரிய ஆத்ம தத்துவத்தையெல்லாம் அப்படியே உறுதியாக வைத்துக்கொண்டே—தன்னை ஆசிரயித்து வரும் மனிதர்களின் ஆத்மார்த்த பாரமார்த்திகத்திற்குரிய தன்மைகளையெல்லாம் போதித்தற்பொருட்டு எல்லாக்காலத்தின் தேவைகளையும் தனக்குள்ளே கொண்டுவந்து ஒன்றுசேர்த்து வைத்திருக்கின்றது. ஆண்டவன் மனிதவர்க்கத்தை இஸ்லாத்திற்காகவென்றே படைத்திருக்கவில்லையென்றும், ஆனால், தன்பால் நம்பிக்கை கொண்டவர்களின் சன்மார்க்க ஒழுக்கத்திற்கும்; பாரமார்த்திக மேம்பாட்டிற்கும் உரிய துறைகளை அழித்தற்பொருட்டே அவன் (ஆண்டவன்) இஸ்லாத்தை அருளியிருக்கின்றானென்று நாம் தைரியமாகக் கூறலாம்.

முஸ்லிம்களும் கலைஞானமும்—இஸ்லாம் தனக்குரிய உத்வேகத்திலும், விசுவசக்தித்துவத்திலும் ஐரோப்பாவை அதற்குரிய சோம்பேறித்தனத்திலிருந்து தட்டியெழுப்பி அதனை ஓர் ஆத்மார்த்தீகத்திற்குரிய சக்திமயமாக உருப்படுத்திவிட்டதென்று நாம் தடையின்றிச் சொல்லலாம். ஆகவே, இஸ்லாமும் கிறிஸ்து மதமும் எதிரெதிராக முட்டிக்கொண்டு நின்ற காலத்திலே கிறிஸ்து மதத்தின் பாரமார்த்திகக் கல்வியும், அதன் தேசீய இராஜீய ஒழுங்குகளும் இஸ்லாத்தினுலேயே அதிகம் உருவாக்கப்பட்டிருக்கின்றன. முன்னொரு காலத்தில் ஐரோப்பாக் கண்டத்தில் கல்வி யென்பதே இஸ்லாத்திற்குரிய அரபி பாஷையின் வாயிலாகவே கற்கப்பட்டு வந்தது. அப்

பொழுதெல்லாம் ஐரோப்பிய ஞானிகளனைவரும் ஸ்பெயின் தேசத்திற்குச் சென்று ஆங்குள்ள கலாசாலைகளிலும், புத்தகசாலைகளிலும் குவித்துவைக்கப்பட்டிருந்த ஞானத்தின் கருவூலத்தைக் கொண்டு தங்கள் ஹிருதயங்களைத் திறந்துகொண்டு சென்றார்கள். அருங்கலைகளும், நுண் கலைகளும் இஸ்லாமிய தேசங்களிலே அதிகமான உச்சத்தை யடைந்திருந்தன. பட்டண வாழ்க்கையென்பதும் மஹா மேலான அந்தஸ்தையே அமைந்துகிடந்தது. எனவே ஸ்பெயின் தேசத்திலிருந்து பிறகொரு சமயம் அந்தக் கைத்தொழில், முயற்சி மிக்க அரபிகள் வெளியேற்றப்பட்டதன் பின் திடீரென்று அந்த ஸ்பெயின் தேசத்தில் 16-வது நூற்றாண்டில் கைத்தொழிலென்பதே அடியோடு ஒழிந்துபோயிற்று. இவற்றைப்பற்றியெல்லாம் நாம் அதிகம் விவரித்தெழுதத் தேவையில்லை. ஏனெனின், இவ்விஷயம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியக்கிடக்கின்றது. ஆனால், இஸ்லாத்தினால் கலாஞானத்தை அபிவிருத்திசெய்ய முடியாதென்று கூறப்பட்டு வரும் ஒருவகை தப்பபிப்பிராயத்தை அடியோடு ஒழிப்பதற்காகவே அவற்றை யெடுத்து விளக்கவேண்டியதிருக்கிறது. இவ்வாறு கூறுவதைப்பார்க்கினும் வேறோர் அபத்தம் இல்லையென்றே செப்பலாம். இஸ்லாம் அக்காலத்தில் ஏராளமான சைனியங்களை வைத்துக்கொண்டிருந்தது. அவற்றின் முஸ்தீபுகளும், யுத்தத் தந்திரங்களும், தலைவருக்கடங்கி நடக்கும் கட்டுப்பாடும் அப்பொழுதிருந்துவந்த உலகத்தின் ஏனையச் சைன்யங்களின் திறமைகளையெல்லாம் மிகைத்தே நின்றன. இஸ்லாம் கலை ஞானங்களையும், உன்னத அறிவுநூல் விற்பன்னத்துவத்தையும் உண்டுபண்ணி அவற்றைப் பாதுகாக்கவும் வந்திருக்கிறது. அவற்றிலிருந்தே ஐரோப்பிய ஜாதியார்கள் அதிகம் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இனிமேல் புரோகிதமில்லை—முஹம்மது நபி (ஸல்) புரோகிதத்தின் வசீகர வலையை நெடுங் காலத்திற்கு முன்னரே கிழித்தெறிந்து விட்டார் ஆண்டானுக்கும் அடிமைக்குமிடையிலே இஸ்லாம் ஒரு மத்தியஸ்தனை ஏற்படுத்தவில்லை. ஆதியிலிருந்தே இஃதொரு ஜனநாயகமாகவே இருந்து வந்திருக்கிறது. சிருஷ்டி கர்த்தாவுக்கும், சிருஷ்டிப் பொருள்களுக்கும் நடுவிலே எப்படிப்

பட்ட இயக்கத்தாரும் இருக்கவேண்டுவதின்று. குர்ஆன் ஷரீபின் ஞானத்தின் மூலமாகவே ஒவ்வொருவருக்கும் ஆண்டவனது சம்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ள உரிமையுண்டு. இத்தகைய உரிமை சர்வதாராளமாகவே வியாக்கியானஞ் செய்யப்பட்டு வருகின்றது. எனவே, இதன்மீது எந்தப் புரோகிதக் குழாத்தினரும் 144-வது செக்ஷனை உபயோகிக்க இடமில்லை, இதனை உற்று நோக்குங்கால் கிறிஸ்து மார்க்கத்தில் காணப்பட்டதே போன்ற ஒருவகைச் சீர்திருத்தத்தை இஸ்லாம் எப்பொழுதுமே விரும்பி நின்றதில்லை. உண்மையாகவே, இஸ்லாத்தில் காணப்பட்டு வந்த ஜனநாயக சக்தியே தான் கிறிஸ்து மதத்தின் தேசியத்திற்கும், சீர்திருத்தத்திற்கும் பிறகு (ஐரோப்பாவுள்) நுழையத் தலைப்பட்டிருக்கிறது.''

—டாக்டர் ஜூலியஸ் ஜேர்மேனஸ்
(ஹங்கேரியா)

ஹிலால் பிரஸ், வடக்கு ரதவீதி, திருநெல்வேலி. 7-'33.